[illegible]
[illegible]
[illegible]
[illegible]
T.D.K. — 3464
R.R.No. 286-2.1900

O-,87MMPI,K
N00
116588

24 SEP 1900

பிசுமில்லாகிற்றகுமானிற்றகீம்.

சையதுமுஹம்மதுபாவாபகுருத்தீன்

என்றுபெயர்விளங்கிய

# காட்டுபாவாசாகிபு அவர்கள்

# அம்மானை.

286
3-1900

இஃது,

கட்டுமாகுடி.

முத்துமுஹம்மதுபுலவரவர்கள்

இயற்றியது.

4 1. 813
3 64

தேவகோட்டை,

வர்த்தகம்

கா. பெரியதம்பிராவுத்தரவர்கள் குமாரர்

கா. பெரி.

சையதுஇபுராகிம்ராவுத்தரால்

தேவகோட்டை,

மீனலோசனி அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

1900.

[illegible]

ரிஜிஸ்டர் காபிரைட்.

286
3-1900

O-,87MMPL,K
1100

894-8113
3464

பிசுமில்லாகிற்றகுமானிற்றகீம்.

செயகுமுஹம்மதுபாவாபகுருத்தீன்

என்றுபெயர்விளங்கிய

# காட்டுபாவாசாகிபு அவர்கள்

# அம்மானை.

### காப்பு.

பார்புகழாகவெல்லாம் படைத்தவனருளினாலே
காரணமாகவந்து கன்னியைமானங்காத்து
பேர்கெடியானகள்ளர் பெருகியநல்லூர்தன்னில்
கார்பொழிற்காட்சிபெற்ற கர்த்தனேகாப்புத்தானே.

### வெண்பா.

செந்தமிழோர்கொண்டாடுஞ் செய்யதொலியாவாமேற்
பைந்தமிழாலம்மானைபாடவே—விந்தையுள்ள
ஆதியேயனாதியே அழியாவரும்பொருளே
சோதியே நீயே துணை.

தேசம்புகழவருஞ் செய்யதொலி பாவாவின்
வாசமிகுபொற்பாத மாமலரை—நேசமுடன்
சிந்தைதனிலெந்நாளுஞ் சேர்ப்பிக்க நோய்பிணிகள்
வந்தணுகாவண்ணமை வரம்.

## நூல்.

எல்லாம்படைத்தோனே இரணமிகயிரவனே
சொல்லாற்பெரியோனே அய்யோனேகாத்தருள்வாய் (௧)

வல்லோன்றன் தூதர் முஹம்மதுறசூல்கமலமதை
நல்லமலர்ப்பாதம் நான்பணிந்துபோற்றிசெய்வேன் (௨)

இலட்சத்திருபத்து நாலாயிரம்நபிமார்
பட்சமதிமன்னருட பாதம்பணிந்திடுவேன் (௩)

ஆலம்பிமாமா அபுபக்கரே உமறை
ஞாலமதிலெந்நாளும் நாடிப்பணிந்திடுவேன் (௪)

வள்ளலுதுமானலியை வரிசைக்குமாரர்களை
நல்லஅசனுசேனை நான்பணிந்துபோற்றிசெய்வேன் (௫)

நாயனருள்பெற்றுவந்தோர் நாற்பத்திராயிரரை
வியனமுடன் நானடியேன் வாழ்த்திப்பணிந்திடுவேன் (௬)

நன்மைமிகுதியுள்ள நாலுஇமாங்களையும்
உண்மையுடன் எந்நாளும்உகந்துபணிந்திடுவேன் (௭)

மார்க்கமுடனென்றும் மனதில்தரித்திருக்கும்
காக்குமுறைகயதினைக் கருத்தில்நினைந்திடுவேன் (௮)

நாயன்கிருபைபெற்ற நல்லஔலிமார்களைத்தான்
நயனமுடனெந்நாளும் நாடிப்பணிந்திடுவேன் (௯)

நல்லோர்பெரியோர்கள் தானிலத்திலுள்ளவர்கள்
எல்லோருங்கூடி யின்பமுடன்கேட்கவென்று (௰)

நாட்டம்வைத்துநானடியேன் நயவின்மைடர்த்திறைல்
பாட்டதிபாயேமைப் பயலடியேன்நானினைந்தேன் (௰௧)



வெட்டைகசலால் வெகுதுயரப்பட்டதினால்
சட்டமுடன்பண்டிதர்க்குத் தசனளித்தேன்கைஉடைமை ()

வாகாயிருமலுடன் வரினைவெளியில்லா
நோயில்வருத்தமதாய் நோக்கிமனமகிழ்ந்து (௰௩)

வாய்வுசகலாலே பாவாசாகிபைநினைந்திருந்தேன்
தாஷுஉகமாயெல்லோருந் தான்கேட்கவேணுமென்று (௰௪)

பேட்டிலெழுதி யின்பமாய்ப்பாடவென்று
தேட்டமாயாளும் சிந்தைதனில்நினைத்தேன் (௰௫)

அன்பானசொல்லுடையோர் அழகானவார்த்தைபெற்றோர்
வம்பானசொல்லை மனதில்தவிர்த்தபியார் (௰௬)

அன்னவாசற்பேட்டை அழகானதினோர்கள்
மன்னவர்க்குத்தினோர்கள் வளர்க்கும்பெரியோர்கள் (௰௭)

ஏற்றமுடனிருக்கும் இலப்பையூர்தினோர்கள்
வார்த்தையுடன் பிமான்வகுத்திவிக்கும்ஆலிம்தான் (௰௮)

மன்னர்மன்னர் தான்மகிழும் முகம்மதுலெவ்வைஆலிம்
சொன்னவுரைப்படியே சொல்கேட்டுநானடியேன் (௰௯)

காத்துவெகுநாளிருந்து காரணங்களுள்ளதெல்லாம்
காத்திருந்துதான்கேட்டுக் காரணத்தைப்பாடிவைத்தேன் ()

வந்தவரலாற்றையெல்லாம் வகைவகையாய்த்தான்கேட்டு
சந்தோஷமாய்ப்பாடித் தமிழாயெழுத்துவிட்டேன் (௨௧)

கேட்டுமனமகிழ்ந்து கிருபையுள்ளோர்காரணத்தை
பேட்டிலெழுதிவைத்தேன் எல்லோருந்தாம்புகழ (௨௨)

ஏகபெரியோன் இறையோனுதவிபெற்றோர்
வாகாவரிசைபெற்றோர் வந்தார்மீனுமிபத்தில் (உங)

வந்தார்மீனுமியத்தில் மதிபோலழகுடையோர்
தந்தார்மருந்துதன்னைச் சங்கையுள்ளகாரணவர் (உச)

கையாற்பிரம்பெடுத்து காரணமாய்வீற்றுநின்று
பையவடியேன்முகத்தைப் பார்த்துமருந்துதந்தார் (உரு)

ஐயமறப்பயந்து அடியேன்மீனுமியத்தில்
கைநீட்டிவாங்கியிரு கண்ணிலுமொற்றியிட்டேன் (உசு)

முத்தியிட்டுவாயில்விட்டேன் முகம்பார்த்துக்கையெடுத்தேன
பத்தியுள்ளமன்னருட பாதந்தனில்விழுந்தேன் (உஎ)

கடுகவெழுந்திருந்தேனிரு கண்ணைவிழித்துவிட்டேன்
படுவான்திசைநோக்கிப் பார்த்தேனுங்காணவில்லை (உஅ)

பொழுதுவிடிந்து புகழ்ச்சியாய்த்தானெழுந்து
பழுதுபடாமன்னவர்மேல் பாடிவைத்தேனம்மானை (உகூ)

ஒப்புடனேவந்தசல் உடலைவிட்டுப்போனதினால்
தப்பிதங்களில்லாமற் சகலசனந்தான்மகிழ (ஙய)

காயல்நகர்க்கதிபன் கட்டுமாதன்னகரான்
செயஞ்செய்துபிள்ளை செல்வமுத்துமுகம்மதுதான் (ஙக)

வரிசைப்புகழுடைய பாவாசாயிபுவருங்காரணத்தை
பிரியமுடனெந்நாளும் பேர்விளங்கப்பாடிவைத்தேன் (ஙஉ)

ஏழைப்பயலடியேன் இவ்வோனிக்காரணத்தை
சாலைவழிநூல்தழைத்த தகமைபோற்பாடிவைத்தேன் ஙங



இப்புவியிலுள்ளவர்கள் இன்பமுடன்கேட்டுகன்றாய்
செப்புமுலகையுள்ளோர்க்குத் தவாவோதம்பிகருந்தான்

மறுமைக்கலிவாணர் மனதுகந்துபார்த்தானாய்
அறிவோபமில்லாமல் ஆண்டோனருளுக்காக (ஙரு)

எழுத்துப்பிழைபார்த்து வேட்டுவரியோப்பமிட்டு
பழுதுப்பிழைபார்த்துப் பார்ப்பீர்பெரியோர்கள் (ஙசு)

வருஷம்விளம்பிதனில் வாகானவைகாசியில்
இருசொல்லழகாக ஐம்பதாந்தேதிதன்னில் (ஙஎ)

வெள்ளிக்கிழமை விடியுங்கொண்டுபாஜருக்கில்
பள்ளிதனிலிருந்து பாடிவைத்தேனெல்லவர்க்கும் (ஙஅ)

வரிசைப்புகழுடையோர் பாவாசாயிபுவருங்காரணத்தை
தெரியப்பெரியோர்க்குச் சிறப்பாகப்பாடிவைத்தேன் (ஙகூ)

அறப்பதிதேசம் ஆனசபாமண்டலத்தோர்
மகரிப்பதிதேசம் வாழ்ந்திருக்குமலாருநகர் (சய)

அருகக்குலந்துதித்த கோமானாபிபோர்
இறைசொல்த்தவறாத யேற்றமுள்ளகாரணவர் (சக)

லாருநகர்தனிலே நானிலத்திலுள்ளவரில்
வாருடனேநல்ல வரிசைக்கொலுவுடையோர் (சஉ)

இஞ்சில்தவறேர்த்து சவுரும்மாபொருக்கான்,
செஞ்சில்தனிலுதித்தோர் சேரானகாரணர்தான் (சங)

அறியுமனைபொறுக்கான் அன்பானசொல்லதுவும்
பெரியதவமுடையோர் பேர்பெரியபுண்ணியவான் (சச)

காரணமே சகலமுனிபோகர்த்தருடதாதே
காரணத்தானுள்ள ஹைபிபுமுகம்மதே (௬எ)

லாருகர்த்தேசம் நாளிருக்கும் ஊர்பதிதான்
தருமாகயெந்தனுடன் நகப்பன்தாய்பேர்கொடுத்தார் (௬அ)

வரிசைப்புவிமீதில் வாழ்ந்திருக்கும்பேர்களுக்கு
பிரியமுடனழைக்க பேரிட்டார் சைய்யதென்ன (௬௯)

சொன்னமொழிகேட்டுத் தாய்பமுகம்மதரும்
மன்னர்முகம்பார்த்து மகிழ்ந்துசிரித்தனரே (௭௰)

நாயனுதவியினால் நல்வரிசைகேட்டதெல்லாம்
நாயன்கொடுத்திடுவான் நல்லவர்க்குஉள்ளதெல்லாம் (௭௧)

தூவாவுரைத்திடவே நல்லபுகழ்மன்னவரும்
ஊருபாலில்நின்றவர்க்குக் கருத்தாய்சலாமுரைத்தார் (௭௨)

நின்றுசலாமுரைத்தார் நீதியுள்ளமன்னவரும்
அன்றுபொழுதில் அதிரவழிநடந்தார் (௭௩)

மதுரைநகர்கடந்தார் மற்றுமுள்ளநாடுவிட்டார்
பதியின் அறபாத்து பட்டணமுந்தான்கடந்தார் (௭௪)

பொங்குகடல்போலே புத்தியுள்ளமன்னவரும்
தங்குதிலேதோன்றாமல் தானடந்தார்யோசனையால் (௭௫)

தேசகருமில்லை திசைகருந்தானுமில்லை
வாசமுள்ளமன்னவரும் வழிநினைந்தாரன்றிரவு (௭௬)

செயிலானிநாடுவிட்டுச் சுருபாமலையோரம்
மயிலாடுங்கானகத்தில் வந்திருந்தார்மன்னவரும் (௭௭)



ஆதிபெரியோனை அன்பாய்மனதில்வைத்து
நீதியுள்ளமன்னவரும் நினைத்தார்கபிதனையே (௭அ)

அன்றிரவுநித்திரையில் அயர்ந்துறங்கும்வேளையிலே
கண்ணொளிபோலாக நபிபிறகுல்வந்துநின்றார் (௭௯)

நின்றார்மகிழ்ச்சியுடன் நெடியமலர்க்கானகத்தில்
கண்டுவிழித்தெழுந்தார் கதிரோனுந்தானெழுந்தான் (அ௰)

வெய்யோனுந்தானெழும்பி வெகுதூரம்போனபின்பு
பையவெழுந்திருந்து பார்த்தார்திசைதனிலே (அ௧)

வருதாப்பதிகரும் வாய்த்ததொருபூங்காவும்
தருதியுடன்சூழ்ந்திருக்குந் தங்கக்கொடிதோன்ற (அ௨)

வெள்ளைமனைறாவும் வேடிக்கையும்பொன்கொடியும்
சொல்லையுகந்த அய்யோருங்கண்டுகின்றார் (அ௩)

கண்டுகின்றமன்னவருங் கருத்தாலெழுந்திருந்து
நின்றுதுவாவோதி நெடியமலர்க்காவிருந்தார் (அ௪)

வையம்புகழவரும் முகையதீன்பூங்காவில்
கெபயாடந்துவந்து பள்ளிதனில்வீற்றிருந்தார் (அ௫)

வந்துபணிந்தார் மணிமாடமுள்ளிருந்தார்
சந்தோஷமாயிருந்தார் சங்கையுள்ளமன்னவரும் (அ௬)

அன்றிரவுநித்திரையில் அன்பாய்நிறுமியத்தில்
பொன்னொளிபோல்வந்து பூவணையில்வீற்றிருந்தார் (அஎ)

வரிசைமுகையதீனை வாகாகக்கண்டவுடன்
பிரியமுடனெழுந்து பேணிச்சலாமுரைத்தார் (அஅ)

பொன்னகரம்பட்டணத்தில் புகழ்பெரியவர்த்தகரும்
அர்ச்சகரிதன்னைவிட்டு அன்புடனேயேற்றிவிட்டார் (௧௧௧)

பார்புகழுமன்னவரும் படைத்தோனைநெஞ்சில்வைத்தார்
நேருடனேவந்தோர் நெடுங்காற்றுவிசியதே (௧௧௨)

நங்கூரஞ்சொல்லியிட்டு நாயனுடதின்கூறி
பாங்குடனேஓடப் பதினறுபாயிழுத்தார் (௧௧௩)

பாயிழுத்துக்கப்பல் பலகடலுங்கண்டோடி
ஏழுநாள்கப்பல் இசைந்துகடலோடி (௧௧௪)

குழமலைதெரிய துறைகண்டுஓடிவந்தார்
ஆழக்கடலைவிட்டு அடுத்தார்கரையோரம் (௧௧௫)

அன்றுகரைகண்டு அல்லாவுதவியினால்
நின்றுநின்றுகூறிநெடியோனைப்போற்றிசெய்தார் (௧௧௬)

பொங்குகடலோடிவந்து பொட்டெனவேபாயிறக்க
நங்கூரஞ்சினிதள்ளி நன்றாய்விடுதிவிட்டார் (௧௧௭)

அல்லிமகாராசன் ஆண்டிருக்குஞ்சீமைவந்தார்
சொல்லியிந்தக்கப்பல்விட்டுந்துறையிலிறக்கிவிட்டார் ௧௧௮

பார்புகழும்மன்னவரும்பதிதனிலேதானிறங்கி
ஊருக்கேவீதிவழி உகந்துநடந்துவந்தார் (௧௧௯)

வடதெருவும்வீதி வழிநடந்தார்மன்னவரும்
திடமுடனேபள்ளிதனில் சிறப்பாகவீற்றிருந்தார் (௧௨.0)

அசருதொழுதார் அவ்வூரிலேயிருந்தார்
பசுறொருத்திப்போகவென்று பள்ளிதனில்வீற்றிருந்தார் ()



மகரிபுதான்தொழுது மகிழ்ந்துநாவாவிருந்தார்
நகரிலுள்ளமோதினும் நாட்டமுடனவர்களுஞ்சொன்னார் ௧௨௨

ஏசாத்தொழுதார் இறையோனைப்போற்றிசெய்தார்
பாசமுடனிறைமைப் பணிந்துநவர்விருந்தார் (௧௨௩)

அன்பாய்த்துவாவோதி ஆதிதனைநினைந்தார்
துன்பமில்லாமன்னவரும் தயிலுகின்ற அன்றிரவு (௧௨௪)

அன்றிரவுகோட்டைக்கதிபன்விராயனுந்தான்
மன்னவனுங்கோட்டைவிட்டு வாசல்வந்தானன்றிரவு ௧௨௫

ஆதியருள்பெற்ற அல்லிமகாராசனுந்தான்
சாதிமணிப்பஞ்சணைமேல் தான்றுயின்றானன்றிரவு (௧௨௬)

பொன்பூசும்பஞ்சணைமேல் புகழ்ந்துபடுத்திருக்க
நபியைமின்னுமியத்தில் காட்டமுடன்கண்டபின்பு (௧௨௭)

எங்களிறையோன் தூதே யெனக்கருள்பெற்றவரோ
மங்காமணிவிளக்கேமாணிக்கப்பொன்னொளியே (௧௨௮)

ஆதங்கிளைதனக்கு ஆணிமுத்தாய்வந்தவரோ
உங்கள்பாதத்தைநோகப் பயவிடத்திலெங்கேவந்தீர் (௧௨௯)

உங்கள்பதியிலேநீர் உகந்திருக்குங்கோட்டையிலே
மங்காதமாணிக்கம் வழிநாடிவந்தவரை (௧௩.0)

கண்ணாலேதான்பார்க்கக் கருத்திலேயோவுங்களுக்கு
பத்திநிறையுடைய பள்ளிமுகப்பிலேதான் (௧௩௧)

அருமைப்புகழ்படைத்த ஆதிதனக்குகந்த
உரிமையுள்ளமன்னவர்தான் உகந்துநாயில்வந்திருக்க (௧௩௨)

பஞ்சணைமேலேறிப் படுத்திருந்தாய்மன்னவனே
அஞ்சாமல்நீயெழும்பி அரண்மனைவிட்டேகடந்து. (௧௩௩)

அஞ்சமுடன்மன்னவரைச் சலாமுவாந்துவாருமென்றார்
பஞ்சணையிற்றுயின்ற மன்னவனுங்கண்விழித்து (௧௩௪)

திடுக்கென்றேதான்விழித்தார் செல்வமனையுட்டிருந்தார்
படுத்திருக்குமாமியிலே பைங்கிளியேநடக்கின்றார் (௧௩௫)

குத்துவிளக்கெரியக் கொண்டுவரும்வாங்குமிங்க
பத்தினியாள்பீவி பாத்துமாதானெழும்பி (௧௩௬)

கைநீட்டிநின்று கைக்கருமஞ்செய்தாரவள்
மெய்யுயர்கன்னியர்க்கு விதம்விதமாய்ச்சேதிசொன்னார் ()

அல்லிமகராசன் அன்பானதேவியற்கு
மெல்லியரேயிருவர் விஷயமதுவேனும் (௧௩௮)

விழித்தவரலாறும் முகம்மதுதன்சொல்லதுவும்
நினைத்தவரலாறும் நிச்சயமாய்ச்சொல்லுகின்றார் (௧௩௯)

அப்படிக்கியிவ்வளவு அல்லிமகராசனுந்தான்
குறைசிகுலத்துதித்த யோசனையர்க்கேசொல்லுகின்றார் ()

கண்டகனவியமுங் காரணமுஞ்சேதிகளும்
கொண்டமனைவியர்க்குங் கொற்றவனார்சொன்னவுடன் ()

சந்தோஷமாய்க்கேட்டு சங்கையுள்ளபீவியுந்தான்
பொன்போலேவாய்திறந்து புகழுடனேசேதிசொன்னார் ()

மதியுடையமன்னவரே மார்க்கமொழிகற்றவரே
பதிதனிலேவந்தவரைப் பார்த்துவரவேணுமென்றார் (௧௪௩)



ஆலாபிசொன்ன அடையாளச்சொற்படிக்கி
கோலவிழிமடவாள் கொற்றவனேவாருமென்றாள் (௧௪௪)

கொற்றவர்பள்ளியிலே குருஜோதும்மேடையிலே
பத்தியுள்ளமன்னவரைப் பார்த்துவரவேண்டுமிப்போ (௧௪௫)

மெல்லியர்தான்சொன்ன விபரமதுகேட்டு
அல்லிமகாராசனொரு அரபிதனையழைத்து (௧௪௬)

பள்ளிமுகப்பேறிப் பார்த்துவாவென்றுசொன்னார்
சொல்லிவாய்மூடுமுன்னே அருசாகவேயெழுந்து (௧௪௭)

நாதன்கடந்தோடிச் சொன்னபடியேபார்த்து
தாதனருள்பெற்றவரை நட்டுடனேகண்டுவந்தான் (௧௪௮)

கண்டுவந்தசேதியதக் காவலனுந்தான்கேட்டு
கொண்டுவரச்சிவணங்கள் கொற்றவனுந்தானமைத்து ()

பாலபழமுஞ்சர்க்கரையும் பசுந்தானபூங்கதலி
தேன்மிர்தங்கற்கண்டு தெவிட்டாதமாங்கனியும் (௧௫())

இஞ்சியுடன்நல்ல யெலுமிச்சநற்கனியும்
அஞ்சுவர்ணமுள்ள ஆணிப்பொன்தட்டில்வைத்து (௧௫௧)

இஞ்சிப்பழமும் இளநீருங்கண்திறந்து
வஞ்சமில்லாக்கனிகள் வகைவகையாய்த்தானும்வைத்து

மல்லிகைமுல்லை மலருமிருவாட்சிபிச்சி
செண்பகப்பூநல்லரளி செவந்திப்பூநல்மலரும் (௧௫௩)

வாடாதபூமாலை வகைவகையாய்த்தானெடுத்து
நாடாளுமன்னவனும் நல்லபலவாசனைகள் (௧௫௪)

பள்ளிருந்தசந்தனமும் பலவாசந்தான்போட்டு
வெங்கிருந்தவன்னிரும் விதம்விதமாய்த்தானெடுத்து (க௫௫)

கொத்தோடாமம்பாக்கு கொடியோடுவெற்றிலையும்
சுத்தமுள்ளசுண்ணாம்பு சுகமாகக்கொண்டுவந்து (க௫௬)

ஆணிப்பொன்கட்டில்வைத்து இரு ஆள்தலையிலேயெடுத்து
காணிக்கையாகக்கொண்டு கருத்தாயெழுந்திருந்தார் (க௫௭)

அல்லிபகாராசனும் அவர்தேவிபாத்தமுத்து
பள்ளிக்கிறிப்போசப் பரிவாய்நடந்தார்கள் (க௫௮)

கோட்டை திறந்து கொற்றவனுந்தேவியுமாய்
வாட்டைவழிநடந்து வந்தார்கள் நால்பேரும் (க௫௯)

கொத்துலாப்பள்ளி குருநேனும்மேடையின்மேல்
சித்திரம்போல்வந்து சிறப்பாகநின்றார்கள் (க௬0)

குரகுத்துலாத்திருந்த கோமானபிபேரர்
கொடுங்கைதனைக்கொடுத்துக் கொற்றவனுர்பார்த்திருந்தார்

பெருகுருநிறைபெரிய முகப்பெல்லாம் மின்னிலங்க
அழகுபடிவிளங்க அங்கிருந்தார்மன்னவரும் (க௬௨)

வந்திருக்குமன்னவர்க்கும் மகிழ்ந்துசலாமுரைத்து
சந்தோஷமாகத்தாள்பணிந்துநின்றார்கள் (க௬௩)

பாதம்பணிந்தார் பாதமலர்கண்ணில்வைத்தார்
வேதந்தமைபூச்சவந்த வேதாம்பரமிட்டுநின்றார் (க௬௪)

கஸ்தூரிமாமணம்வீசுகின்ற கனகமயில்பாத்தமுத்துப்
பொற்பதத்தைப்பணிந்து புகழ்ந்துசலாமுரைத்தார் (க௬௫)



எதிட்டுப்பார்த்தார் மிரகுல்நபிபேரர்
பாரிட்டகண்கள்ரெண்டும் பாங்காகத்திப்பறக்க (க௬௬)

என்னடுத்திபாலே யிருட்டிராவுயென்னிடத்தில்
மன்னவர்க்குமன்னவனாய் மாநிலத்திலேயிருந்து (க௬௭)

சாதிமொழிமார்க்கமதைத் தானிருந்துகேட்டாக்கால்
வீதிவழிகூட்டிவர வெற்றியுண்டோவுர்தனுக்கு (க௬௮)

அறியாதயோசனையாய் அழைத்துவந்தாய்மன்னவனே
தெரியாதபுத்திக்குநான் சொல்வதென்னவுந்தனுக்கு க௬௯

சோதிநபிபேரர் சொன்னமொழியைக்கேட்டு
நீதிதவறாத நேர்மையுள்ளோரே துரைப்பார் (க௭0)

ஆதிதனக்காக அடியேனுன்செய்தபிழை
நீதியுள்ளமன்னவரே நீரேபொறுத்தருள்வீர் (க௭௧)

அல்லாதனக்காக அடியேனுன்செய்தபிழை
எல்லாம்மனம்பொறுத்து யேற்றமிகத்தந்தருள்வீர் (க௭௨)

என்தாயேகன்னியரே இளமயிலேபாத்துமுத்து
உன்புருடன்தன்பிரகே நீ உகந்துவரமார்க்கமுண்டோ ()

இச்சாமவேளையிலே யிருட்டிராவுதன்னிலேதான்
அச்சமறநீயும் அடர்ந்துவரக்காரியமோ (க௭௪)

மாதாவைப்பார்த்தமுத்து யிதமாக்கத்துக்கேறுது
எருதசொல்லை யினிப்பொறுத்தேனுன்றலே (க௭௫)

உன்னுடையகையாலே உன் உடையவன்தன்சொற்கேட்டு
கண்ணுலேதான்பார்த்தோற கனியெடுத்துத்தாருமிப்போ

மெய்யானநாகூரில் மேன்மையுடன்வந்திருந்தார்
செய்யதப்துல்காதருடை சீர்பாதங்காணவென்று (௧௯௯)

முகையதீன்வாக்குரைத்த வார்த்தைமொழிதப்பாமல்
வகையுடனேபள்ளிவந்து வாகாயிருக்குமுன்னே (௨௦௦)

தேசம்புகழவந்த செய்யதப்துல்காதரொலி
வாசமுடன்வந்துநின்று வாருமென்றார்ஆசனத்தில் (௨௦௧)

வாருமென்றுசொல்ல மன்னர்சலாமுரைக்க
பேரும்புகழாகவந்த பெரியோர்சிரியுமென்றார் (௨௦௨)

நாயனருளாலே நாகூர்ப்பதிதனிலே
நாயன்கிருபையினால் நல்லுதவிபெற்றோரே (௨௦௩)

சங்குவலம்புரியுஞ் சமுத்திரத்திலேயிருந்து
பொங்குகடற்கப்பல்வர புவியிலதிசயமாய் (௨௦௪)

வந்தவற்குசேதிசொல்லி வாக்கால்ழைத்திரோ
கப்பலதுநீர்பெருகக் கண்ணாடியாலடைத்தீர் (௨௦௫)

நாலுமணருவும் நாடுயர்ந்தபொன்குடமும்
குழுமதிலெடுப்புஞ் சுகம்பெற்றகாரணரோ (௨௦௬)

பெரியமணராவும் பேரானநாகூரும்
அரியதவத்தாலே அழைப்பித்தகாரணரோ (௨௦௭)

சுற்றிவளர்டும் சொர்ன்முள்ளநன்னடும்
பத்திபத்தியாகப் பதியிலிருப்போரே (௨௦௮)

கப்பல்வருந்துறையுங் கடலுயர்ந்தஊராரும்
செப்பமுள்ளவர்த்தகருஞ் சேர்ந்திருக்குங்காரணரோ (௨௦௯)

23



சொர்க்கமணிவிளக்கே தூண்டாதமெய்ப்பொருளே
ஒப்பதனிறருளுடைய காரணத்தால்வந்தவரே (௨௧௦)

இந்தநல்ர்தனிலே இறையோனருளாலே
வந்திருந்துகாட்சிபெற்றீர் வல்லோன்கிருபையினால் (௨௧௧)

வேதகவமணியே வெற்றியுள்ளகாரணரே
நாதனருள்பெற்றவரே நான்போகவேணுமென்றார் (௨௧௨)

நின்றுசலாமுரைத்தார் நெடுந்தூரம்போறனென்றார்
மண்டலத்தைநோக்கி வழிநடந்தார்மன்னவரும் (௨௧௩)

சோழநகர்கடந்தார் துருசாய்வழிநடந்தார்
சாலைவழிகடந்து தஞ்சைநகரில்வந்தார் (௨௧௪)

தஞ்சைநகரில்வந்தார் சமஸ்தானந்தான்கடந்தார்
இக்கேதமகிழ்ந்து அவர் திருச்சினாப்பள்ளிவந்தார் (௨௧௫)

பாருபுர்ந்தவோன்மலையும் பட்டணமுங்கோட்டையுமாய்
பேருயர்ந்தநத்தரொலி பேர்பெருகும்வாசல்வந்தார் (௨௧௬)

நாயனருள்பெற்றுவந்த நத்தரொலிபாவாவும்
ஒலிமார்களெல்லோரும் உகந்திருக்கும்வேளையிலே (௨௧௭)

காரணமாய்வந்தவரைக் கண்டார்மனதுவந்தார்
வாருமென்றுசொல்லிவந்தார் மன்னர்சலாமுரைக்க (௨௧௮)

பேர்புகழாகவந்த பெரியோர்சிரியுமென்றார்
பார்புகழவந்தமன்னர் பண்பாகத்தானிருந்தார் (௨௧௯)

நாயனருள்பெற்றுவந்தோர் நானிலத்தில்வந்தவிடில்
நாயனருளாலே நானும்மைக்கண்டேனென்றார் (௨௨௦)

வரிசைப்புகழ்படைத்தார் வானகத்தில்வந்தவரில்
பிரியமுடனெல்லவர்க்கும் பேர்விளங்கவந்தவர்காண் (௨௨௧)

தெற்குவடக்குத் திசைகிழக்குமேற்குமட்டும்
திக்குத்திசைதனக்குஞ் சிறப்பானகாரணர்காண் (௨௨௨)

ஆதியருள்பெற்றுவந்த ஆனஒலிமார்களிலே
நீதிமறைவேதமொழி நெஞ்சில்தரித்தவர்காண் (௨௨௩)

கர்த்தனருளாலே காட்சிபெற்றகாரணரில்
சித்தந்தழைக்கவந்த நீதியுள்ளகாரணரே (௨௨௪)

தீனோர்க்குநாயகமே செல்வமணிவிளக்கே
வானோர்மகிழ்ந்து வந்துதித்தகாரணரே (௨௨௫)

ஆகாதகாபர்கள்தான் அடருமங்குசிறுங்காட்டில்
வாகாய்வரிசைபெற்று வழிநடந்துவந்தீரே (௨௨௬)

நாயனருள்பெற்றுவந்த நக்கரொலிமார்க்குளாக்கள்
உபாயமுடன்சைய்யதொலி உகந்துசலாமுரைத்தார் (௨௨௭)

ஆதியருளாலே அயில்க்காவுதனைநோக்கியவர்
நீதியுள்ளசைய்யதொலி நினைந்துவழிநடந்தார் (௨௨௮)

கள்ளர்பரிகாடுங் காவியர்ந்தசோலைகளும்
கல்லகினைவுடனே காட்டம்வைத்துப்போகையிலே (௨௨௯)

மன்னர்மன்னர்தாமகிழும் மகிபன்ரெகுநாதேந்திரன்
பொன்னுனாடு புதுக்கோட்டைச்சீமைவந்தார் (௨௩௦)

மட்டற்றசெல்வமுடன் மகிழ்ந்துதொண்டமானிருக்கும்
பட்டணத்தில்வாழுகின்றபறஹுமிய்யாசாய்பொலியை (௨௩௧)



கண்டுமனமகிழ்ந்து கடுந்தூரம்போகவென்று
நின்றுநினைத்தாரே நெடியோன்கிருபையுள்ளோர் (௨௩௨)

பறஹுமிய்யாசாய்பிருக்கும்பள்ளிமுகப்பில்வந்து
அரபுப்பதியிலுள்ளோர் அங்கிருந்தாரன்றிரவு (௨௩௩)

அன்றிரவுதங்கி ஆதிதனைப்புகழ்ந்து
பொன்னொளிமேடையின்மேல் புகழ்ந்துபடுத்திருந்தார்

பக்கிரிகள்கூட்டமுடன் பறஹுமிய்யாசாய்பொலியும்
திக்கிர்முழங்கிவந்து சேதிசொன்னாரன்புடனே (௨௩௫)

மினுமியத்தில்கண்டவுடன் மனதாமிகமகிழ்ந்து
மினுமியத்தில்வந்தவர்க்கு மகிழ்ந்துசலாமுரைத்தார் (௨௩௬)

மகிழ்ந்துசலாமுரைக்க மன்னவருமங்கிருக்க
மகிழ்ந்துசலாமுரைத்து மகிழ்ச்சியுடன்கேட்குகிறார் (௨௩௭)

நாதன்நகரோரே நானிலத்தில்வந்தவரே
வாகுடனேகாபருட வழிதேசம்வந்ததென்ன (௨௩௮)

சொர்க்கநகரோரே சொல்லுகந்தகாரணரே
இரசூல்குலத்துதித்த யேகனருள்பெற்றவரே (௨௩௯)

கர்த்தனருள்பெற்றவரே காரணரேகண்மணியே
நித்தநித்தம்தீன்வழியில் நேர்வழியிலுள்ளோரே (௨௪௦)

மக்கநகர்காடுவிட்டு மறுதேசம்வந்ததென்ன
திக்குகளெல்லாந்துதிக்கும் செய்யதொலிபாவாவே (௨௪௧)

காடுமரமும் கானகமும்பூங்காவும் இந்த
நாடுநகர்கடந்து நடந்தெங்கேபோகிறீர்கள் (௨௪௨)

மதுரைப்பட்டினமும் மற்றுமுள்ள சீமைகளும்
அதிரவழிநடந்து ஆரிடத்திற்போறீர்நான் (௨௪௩)

சேரம்புகழ்வரும் செக்கந்தர்பாச்சாவுடைய
பாதந்தனைப்பார்க்கயிந்த பாதைவழிபோறீரோ (௨௪௪)

தாரணியோர்தான்புகழும் சதக்கத்துல்லாசாய்பொலிவை
காரணமாய்த்தான்பார்க்கக் கருத்துடனேபோறீரோ (௨௪௫)

என்றுபறலுமிய்யா யின்பமாய்ச்சொன்னவுடன்
கண்டுவிழித்தாரே கத்தனருள்பெற்றவரும் (௨௪௬)

பறலுமிய்யாசாய்புசொல்லப் படுத்திருக்கும்மேடைவிட்டு
விருதுடனேதானெழுந்து வெகுதூரம்தானடந்தார் (௨௪௭)

வெள்ளாந்திபுரமும் வெள்ளாற்றுநீர்பாயும்
கல்லகவறுமெற்ற நாடுதனைக்கடந்தார் (௨௪௮)

பேரானநாடு பெரியோர்வழிநடந்தார்
மாறுதசொல்லுடையோர் வந்தார்திசைநோக்கி (௨௪௯)

திசைநோக்கிப்போகையிலே சேதுவழிதனிலே
பாரமலைமேல்துருவம் பாங்கானகோட்டைகண்டார் (௨௫௦)

எரிவயல்களையும் இருண்டகொடிக்காலும்
மாரிமழைபெய்து வயல்விளையுநன்றூடும் (௨௫௧)

பட்டணமும்நல்ல பலசரக்குவீதிகளும்
திட்டமுடன் தீனோர்கள் சேர்ந்திருக்கும்ஊர்பதியும் (௨௫௨)

ஓதும்உலமாக்கள் உகந்திருக்கும்பள்ளியுமாய்
வேதநபிபேரர்வெற்றியுடன் போகையிலே (௨௫௩)



பேட்டைதனிலிருந்து பெண்மயிலாள்பார்த்துவந்தாள்
பாட்டைவரும்பெண்ணரசே பதியேதெனக்கேட்டார் (௨௫௪)

பதியேதெனக்கேட்கப் பாதைவரும்பெண்மயிலும்
மதகரிபோல்நின்று மங்கையவள்சொல்லுகிறாள் (௨௫௫)

வீரதீரன் விஜயரகுநாததேந்திரன்
பாராளும்நாள்முதலாய் நல்லதிருக்கோட்டையென்றாள்

சொன்னமொழிகேட்டுத் துரைகள் சிகாமணிதான்
மன்னர்நடந்துவந்து மாநிலத்தினுட்புகுந்தார் (௨௫௭)

பள்ளிதனில்வந்தவர்தான் பாங்காயிருந்தபின்பு
அள்ளிஞானவாழியில்நீர் அள்ளானகூசாவில் (௨௫௮)

மேலோனைத்தானோக்கி மேவிஒலுசெய்துவந்தார்
மேவிஒலுசெய்துவந்து விளங்கவரும்பள்ளியிலே (௨௫௯)

மகரிபுதொழுதாரே மன்னவரும்அவ்வூரில்
தொழுதுதுவாவிருந்தார் துய்யோன்தனைநோக்கி (௨௬௦)

ஏசாத்தொழுகைவின்று யிருக்குமந்தவேளையிலே
தாசியுமிரண்டுமணிச் சத்தமதுகேட்டிருந்தார் (௨௬௧)

மக்கநபிபேரர் மணிச்சத்தம்கேட்டவுடன்
தக்கிப்பிறகட்டிக் தரையிற்சுகுதுசெய்தார் (௨௬௨)

தொழுதுசலாங்கொடுத்துத் துருசாத்துவாஓதி
பழுதுபிழையில்லாத பாத்திகாஓதினரே (௨௬௩)

ஆதிபெரியோனை அன்பாய்மனமகிழ்ந்து
ஓதுந்துவாக்களெல்லாம் ஓதிஉகந்திருந்தார் (௨௬௪)

பானும்கதிர்மதியும் படைத்தோனுனைப்படியே
வானசொர்க்கப்பெண்கள் வண்ணமிடுங்கிண்ணத்திலே

ஓடிக்குடனே தண்ணீரும் ரொட்டிகறிமற்றுளதும்
திடுக்கமறத்தான்கொடுத்துத் தின்றின்றுமென்றார்கள்

கண்மெனதாகந்து கைகொண்டுவாங்கியவர்
தின்றுபசிதீர்ந்தார் செய்யதொலிபாவாவும் (௨௬௭)

தூய்யோனனுப்பிவித்த சுவர்க்கப்பதிசனூர்தான்
வையகத்தில்வந்தவர்கள் மாநிலத்தில்வந்துவிட்டார் (௨௬௮)

ஆதிபருளாலேயிக்க ஆலந்தனையாளவந்தோர்
சோதியாய்த்தானிருக்க சுற்றமுள்ளோர்வந்தார்கள் (௨௬௯)

ஏசாத்தொழுகவென்று லெவ்வைபவர்வந்துநின்றார்
பாசமில்லாமோதீனும்பாங்குடனேவாங்குசொன்னார் (௨௭௦)

வாங்குமொழிசொல்லியபின் வந்துநின்றார்நீணோர்கள்
பாங்காயொருமுகமாய் பார்த்தேதொழுதார்கள் (௨௭௧)

தொழுதுசலாங்கொடுத்துச் சுற்றமுடன்போனவர்கள்
பழுதில்லாமன்னரை பார்த்தொருவர்கேட்டதில்லை (௨௭௨)

பள்ளியில்வந்தவரைப் பார்த்துமொழிகேட்டதில்லை
சொல்லானுகந்தவரைத் துருசாயழைத்ததில்லை (௨௭௩)

தொழுதுமுடித்தபின்பு சொல்வார்த்தைகேளமால்
வழியில்நடந்துவிட்டார் மன்னவருந்தானிருந்தார் (௨௭௪)

பொன்னுலமுடிபெருத்த பூபதிதான்பார்த்திருந்தார்
சொன்னரிறையிடத்தில் சொந்தமுள்ளநாயகமும் (௨௭௫)



அல்லாவேயென்னுடைய அருமைப்பெரியவனே
பொல்லாதசீமைவழி புகழ்ந்துநான்வந்துவிட்டேன் (௨௭௬)

சொல்லிமனதில்வைத்துச் சொல்பெரியமன்னவரும்
பள்ளிமுகப்பிற்படுத்திருந்தார் அன்றிரவு (௨௭௭)

ஆசனமேற்போய்படுத்து அவர்தூங்குமன்னேரம்
காரணம்போல்நடக்கக் கண்டார்மினுமியத்தில் (௨௭௮)

பழுதில்லாமினுமியத்தில் பார்த்ததெல்லாமுற்றறிந்து
பொழுதுவிடிந்தபின்புபுறப்படத்தானினைத்தார் (௨௭௯)

வெள்ளியுந்தான்கிளம்பி விடியுமுன்னெழுந்திருந்து
அல்லிபடர்ந்திருக்கும் ஐயாகுளந்தனிலே (௨௮௦)

கூசாவின்னீரெடுத்துக் கொண்டுவெளியில்வர
வாகானசாவலெல்லாம் பாவாசாய்பென்றுகூவியதே (௨௮௧)

மன்னர்வந்தாரென்றுசொல்லிமகிழ்ந்தங்கேகூவியதே
மன்னரொதுச்செய்துவந்து மகிழ்ந்துபசிற்றொழுதார் (௨௮௨)

திருநெல்வேலிச்சீமை சிறப்பாகப்போகவென்று
அருமையுள்ளமன்னவரும் அன்பாய்மனதிலெண்ணி (௨௮௩)

சட்டைதலைப்பாவும் தன்னுடையமேற்சோடும்
இஷ்டமுடன்கட்டிவந்தஇடையிற்சமுதாடு (௨௮௪)

சிங்காணியம்புடனே சிறந்தமிதியடியும்
மங்காமல்வீசிவரும் மயில்விசிறிகைப்பிடித்து (௨௮௫)

சக்கரமுங்கொண்டியுடன் சகலவிருதுள்ளதெல்லாம்
சீக்கிரமாய்த்தானெடுத்துத் திசைநோக்கிப்போகவென்று

சாற்றும்மறைவேதம் தானுணர்ந்தமன்னவரும்
பாத்திராவேர்திப் பதியில்நடந்துவந்தார் (௨௮௭)

கல்லுங்கரடுங் காளகமும்வாவிகளும்
முள்ளுஞ்செடிகளுமாய் மூங்கில்மாச்சோலைகளும் (௨௮௮)

கயலின்விழிமடவார் கன்னியர்கள்நிற்கிறதும்
வயலுங்குளக்கரையும் வாழ்ந்திருக்குமூர்பதியும் (௨௮௯)

தோப்புங்குடியிருப்புந் தோகைமயில்கூவுறதும்
சாய்ப்புள்ளபூங்காவில் கருமந்திகூட்டமிட்டு (௨௯௦)

செங்கெல்விளைந்துசிறுநெல்குலை சாய
மன்னர்மனதுகந்து மனதுமகிழ்ந்துவந்தார் (௨௯௧)

பட்டணமும்ஊரும் பாளிக்குடியிருப்பும்
சட்டமுடன்கண்டு நடம்நோக்கிப்போகையிலே (௨௯௨)

அருமையுள்ளஆட்டிடையன் அங்கிருந்தான்முன்னேவர
உரிமையுள்ளமன்னவரும் உகந்துநின்றுதானழைத்தார் ௨௯௩

இடையாஇடைமகனே யென்னெதிரேவந்தவனே
நடைநடக்கும்சேதுதனில் நதியெங்கேகாட்டுமென்றார்

பதியில்வரும்பட்டாணி பாதைவழிவந்தவனை
நதிதனிலேகாட்டிவிட நடந்திங்கேவாருமென்றான் (௨௯௫)

வந்தயிடையனுமாய் வழியில்வந்தமன்னவரும்
சொந்தமுடன்நடந்தார் தூயபுனல்காடிவந்தார் (௨௯௬)

நாடிநடக்கையிலே நடையிலொருயெட்டிமரம்
சாடிப்பனர்களெல்லாம் தழைத்துமிகப்பூத்து (௨௯௭)



இலையாவிருண்டமரம் யெங்கும்பழம்பழுத்து
குலைசாய்ந்துகீழ்விழுகக் குனிந்துபழம்பறித்தார் (௨௯௮)

இடையாயிடைமகனே யிதுயென்னகனிசொல்லுமென்றார்
மடையனவன்சொல்லுகிறான் வசமில்லாவார்த்தையிவண

நாய்வந்துநின்றுது நரிவந்துதான்புசிக்கும்
பேய்கொண்டைபட்டாணி போட்டுவிடு அவ்விடத்தில் (௩௦௦)

போட்டுவிடுயென்றவுடன் போட்டுவிட்டாரவ்விடத்தில்
காட்டமுடன்மன்னவரும் நடந்தார்களவ்வனத்தில் (௩௦௧)

நாகமரமப்போது நற்கனிகள்தானுதிர
தாகமுடன்நற்கனியை தன்கையால்தான்பறித்து (௩௦௨)

கையிற்பறித்தப்பழம் கண்ணாலேதான்பார்த்தார்
பொய்கைதனைநாடிப் போனாரிருவருமாய் (௩௦௩)

ஏரிக்கரைக்காட்டி யிணவிருந்துநீர்குடித்து
வாரிக்கரைநாடி வழிநடந்தார்மன்னவரும் (௩௦௪)

தானதத்தைக்கண்டுகடுகிநடக்கையிலே
ஆனதொருபட்டணந்தான் அன்பாய்க்கடந்துவந்தார் (௩௦௫)

பாரிலிருக்கின்ற பறளிமலைக்கானகத்தில்
ஏரிக்கரையோரமேலேயிருண்டதொருபூங்காவில் (௩௦௬)

ஆதியருள்கற்பினையால் அந்தத்தடந்தனிலே
சோதியால்வந்து அதனையொருவரில்லாமல் (௩௦௭)

கோதையெனும்பார்பாத்தி கூடுஞ்சனங்களுடன்
பாதைவழிபாத்திருந்தாள் பாலகனைமுன்னேவிட்டு (௩௦௮)

கைக்குழந்தைகின்றழுதக் கைமதலைபால்குடிக்க
கைக்குவரும்பாலகனைக் கால்நடையால்விட்டுகின்றாள் (௩௦௯

பாதைவழிபார்த்தாள்பாலகனை முன்னேவிட்டு
சோதைநின்றுதான்மயங்கி குழந்தைமுகம்பார்த்தாள் (௩௧௦)

பாலன்முகம்பார்த்தாள் பாதைவெளிதான்பார்த்தாள்
வாலக்கிளிமொழியாள் வழிபார்த்துத்தானிருந்தாள் (௩௧௧)

வடமுகத்துப்பாதையிலே மதுரைவழிதனிலே
தடம்சாடிவந்தவரைத் தடத்தில்வரப்பார்த்திருந்தாள் (௩௧௨)

கிட்டவருமளவும் கிளிமொழியாள்பார்த்திருந்து
சட்டமுடன்வந்தவரைச் சாமியென்றுகையெடுத்தாள்

மன்னவரோயெவவூர் மதுரைநகர்ப்பாதைவந்தீர்
அண்ணாலேசொல்லுமென்று அன்புடனேகேட்டுகின்றாள்

வடசீமைதனிலிருந்து மதுரைநகர்போகவந்தேன்
தடந்தனிலேதானிருந்து தான்கேட்கக்காரியமேன் (௩௧௫)

அண்ணலேமன்னவரே எங்கள் அருமைப்பெரியவரே
மன்னவரேநாங்கள்வந்த வாய்மொழியைக்கேளுமென்றாள்

ஏழைமதிப்பட்டபெண்கள் இருந்தபதிவிட்டு
கோழைமனதாலே கோதானம்வாங்கவந்தோம் (௩௧௭)

பாளையக்காரர் படையாற்பெரியவன்றன்
யேழைக்குமன்னவன்தான் எங்களுக்குப்புண்ணியவான்

மண்டலத்துராஜாக்கள் மனமகிழ்ந்துவந்தவரை
தொண்டைமான்ராஜன் சொல்லுகந்தபுண்ணியவான் (௩௧௯)



மாநோன்புபோட மனமகிழ்ந்துயெல்லோர்க்கும்
தானங்கொடுத்தார்கள் தருமதுரைகளுந்தான் (௩௨௦)

ஆசையுடன்கோதானம் அரிசிகறிபருப்பு
வாசமயிலாட்கு வர்ணக்கம்பிச்சேலையொன்று (௩௨௧)

கர்னன்கொடையதுபோல் காசினியிற்பார்ப்பார்க்கு
சொர்ணம்போல்யெல்லவர்க்குஞ் சொல்லிக்கொடுத்துவிட

வாங்கியிருந்தப்பாதைவந்து வாவிக்கரைதனிலே
பாங்கியரும்யென்னுடைய பாலகரும்நீர்குடித்தோம் (௩௨௩)

கானகத்திலேயிருந்தோர் கன்னிசிறுபெண்பிள்ளைதான்
கானகத்துப்பாதையிலே கள்ளர்வருங்கானகத்தில் (௩௨௪)

புலிகரடிமான்மரைகள் புவியிலுள்ளபுங்கனமும்
வழியில்வந்துதான்மறிக்கும் மங்கையரேபோகாதே (௩௨௫)

ஆண்துணையில்லாமல் அஞ்சாமல்நீங்களுந்தான்
பெண்துணையைநம்பிப் போகாதேபெண்மயிலே (௩௨௬)

எட்டியடிவையாதே இந்தவனாந்தனிலே
கட்டுமொழியின்றுசொல்லிக் கடுகிடந்துவிட்டான் (௩௨௭)

மனதுபயந்திருந்தோம் மன்னவரேயிவ்வழியில்
கனிவுடனுங்களையும் காத்தனுப்பிவைத்தான் (௩௨௮)

பெண்புத்தியாலே புறப்பட்டுக்கானகத்தில்
தன்புகொண்டு தலைகெட்டுநிற்குகின்றோம் (௩௨௯)

ஆறுபிராயமனத்தி அழகானபிள்ளைரெண்டும்
காரும்அபிமானம் கானகத்தில்மன்னவரே (௩௩௦)

ஒருதுணையுமில்லாமல் உன்னோர் வழித்திறமையிலே
மங்கைநல்லாளைப்போலிந்த மாட்டேத்திலவந்தீரே (௩௩௧)

எங்களுடைய பாக்கியம்தான் இந்தக்காட்டதனிலே
உங்கள் துணையை தம்பிரான் கூட்டிவிட்டான் (௩௩௨)

கற்றமுள்ள மன்னவரோ நீங்கூடனேமார்சேர்ந்தால்
பெற்றபிள்ளை உங்களுக்குப் பெயரிடுவோம் மன்னவரே

இந்தக்காட்டிருந்தான் கடந்து கள்ளர்பத்தூருமிட்டு
இந்தப்பாதைகடந்து எங்கள் பதிசேர்ந்தோமானால்

உற்றதுணையெனவே உவந்துவழிநடந்தார்
பெற்றபெற்ற பிள்ளைகளெல்லாம் பெயரிடுவோமையாவே

மின்னலையே பேரிடுவேன் மதகளிறே பேரிடுவேன்
சொன்னமொழி தப்பாத சொற்கையென்றுரைமையும் (௩௩௬)

தோகைமயிலாளே செல்வருமை பெற்றவனே
வாசைகமரம் விட்டகன்று வழிதொடர்ந்து வாருமென்றார்

வந்தனங்களுமாய் வழியில் வருமன்னவரும்
சந்தோஷமாய் நடந்து நட்டிலவருகையிலே (௩௩௮)

மைந்தன் கட்டேறிதோடி மாமரவெனத்தொடர்ந்து
மைந்தனவர் கைபிடிக்க மகிழ்ந்து அறுத்துவந்தார் (௩௩௯)

மாங்கனியும் தேங்காயும் மகிழ்ந்து அவல்கடலை
நுங்கத்திரிக்கரையும் புகழ்ந்தவெருத்தாரே (௩௪0)

நாகப்பழமும் நல்லபலாக்கனியும்
ஆக்கமுள்ள மன்னவரும் அதிசயமாய்த்தான்கொடுத்தார்



காசாம்புக்கொத்துடனே கமுகுமுல்லைமாதுளம்பூ
வாசமுள்ளபூமலர்கள் மைந்தனுடைகைக்கொடுத்தார் (௩௪௨)

பிள்ளைகடந்தோடிவரப் புறகேசனங்கள்வர
உள்ளபடி தங்கள் ஊராதியச்சொல்லுமென்றார் (௩௪௩)

கன்னியரே பெண்மயிலே சாணுகத்தில்வந்தபிள்ளாய்
சொன்னபடிவாருந் தொந்தமுள்ளகன்னியரே (௩௪௪)

கன்னிமலைமேற்காய்க் கள்ளர்பத்துநாட்டருகே
கன்னால்விளையும்வைகைக் கரையோரம் எங்கள்பதி (௩௪௫)

வயலூர்ப்பதியெனவே வழியிருக்குதுகாண்
கயல்போலுங்கண்ணுடைய கன்னியவள்சொல்லுகிறாள்

கானகமுந்தான் கடந்து இந்தக் கள்ளர்பத்துநாடுவிட்டு
மானகருந்தான்கடந்து மன்னவரும்போகையிலே (௩௪௭)

வேலெடுத்துக்கைப்பிடிக்கும் மேலூருக்காடுவிட்டு
திருப்புவனங்கடந்து திருப்புத்தூர்காடுவிட்டு (௩௪௮)

வைகைக்கரைகடந்து எங்கள் வயலூரில்போய்த்தரிப்போம்
எங்கள்பதியதுதான் எங்கள்துணையாண்டவரே நீர் (௩௪௯)

தங்கியிருந்துவிட்டுத் தான்போகவேண்டுமென்றார்
சம்பா அரிசியுடன் சரியானபெப்பருப்பு (௩௫0)

வாழைக்காய் கத்தரிக்காய் வாதானபாவிரோரும்
கூழைப்பிலாக்கனியும் சுணைமானமாங்கனியும் (௩௫௧)

சகலசரிவகையும் எங்கள் சாமியார்க்கென்றுசொல்லி
பக்கலிருந்திடுவேன் பாங்காகவுங்களுக்கு (௩௫௨)

மனதுபொருந்தாமலேயுங்கள் மனையிடத்திலுண்டானால் (௧௫௩)
தனதாகவெங்கள்பயிர்சாக்குவிற்குமீரவுசன்

அரிசிகறிகொடுத்து அவன்விட்டிற்சோறுக்கி
வரிசையாயுங்களுக்கு வகைவகையாய்த்தான்படைப்பான்

சேர்வுகறிகொடுப்போம் உங்கள் சொந்தஅடிமையென்றான் (௧௫௫)
பேர்பெரியஆண்டவரே பெரியோரேயெங்கள்துணை

பங்கரிலாமன்னவரே பார்த்திபரேயென்னகரில் (௧௫௬)
பொங்குபுகழ்மதுரைப் பொற்கோபுரந்தெரியும்

சொல்லிவழிநடந்து தொடர்ந்துவருங்கன்னியரே
மெல்லாநடந்தால் மோசம்போலக்காணுமென்றார்களே

மோசம்வருமென்று முன்னேவழிநடக்க
வாசமுள்ளகன்னியவள் மகிழ்ந்துடனேயுசொல்வாள்

மன்னவரேகண்மணியே யென் மாதாவேயென்றனையே
அன்னையரேகானடக்க அருமிருங்கிலேனொண்டும் (௧௫௯)

பின்னையழுகிறது புறங்கால்கள்கோர்கிறது (௧௬௦)
சொல்லியழுது சொனங்கிமயங்கிறது

(ன்றுவேதாகாடிக யென்றுகுமுடியாது
கன்றுதுயக்குடிப்பற்ற காவியனைக்கோத்ததேவே (௧௬௧)

மன்னவரேயிவ்வனத்தில் மதலைகளை தோக்குக்கால்
கன்னமிட்டுக்கொண்டகள்வன்பொல்லாதவன்கான் (௧௬௨)

உற்றுவென்யாய்நாங்களுந்தானீ உசுக்கோடிவக்குவிட்டீ
சுந்திரரேயெங்களுக்குத் தாளடக்கக்கூடவில்லை (௧௬௩)



வாடிமதிமயங்கி மங்கையர்கள்சொல்லிவர
கூடிவருமன்னவிரும் கூடுஞ்சனமெல்லாரும் (௧௬௪)

கானகத்திலேயிருந்து கடும்பசிகள்தான்ஆறி
பால்கொடுத்துமைந்துகளுக்குப்பசியாறித்தானடந்தார் (௧௬௫)

இருபுறமுங்கானகமும் இருண்டமலைச்சோலைகளும்
மருவுமிந்தக்கானகத்தில் மயிலினங்கள்கூவுறதும் (௧௬௬)

இப்படியேயவ்விடத்தில் இருந்துநடக்கையிலே
சொற்பெரியமன்னவர்முன் தொடர்ந்துகடையாசகுதகானா

ஓரிவழிமறிக்க ஊர்க்குருவிகொக்கரிக்க
வாரவழிதனிலே வலகாய்அபயமிட (௧௬௮)

கூகைகுளறிநிற்கக் கொடுமாறுமருண்மறிக்க
வாகைமரமிருந்து மைக்குருவிகொக்கரிக்க (௧௬௯)

காகம்பிறந்து கதறிஅபயமிட
ஆகமுள்ளமன்னவரும் அதிசயமாய்ப்பார்த்துவந்தார் (௧௭௦)

நெஞ்சிலகினைந்தாரே நீதியுள்ளமன்னவரும்
அஞ்சிப்பயந்து அல்லாநினைநினைந்து (௧௭௧)

எழுகடலும் ஈரேழுலோகமெல்லாம்
வாழுமனிதருக்கும் மகிழ்ந்துபடைத்துவைத்தாய் (௧௭௨)

அருசுகுருசும் அழகானசொர்க்கமெட்டும்
வரிசையுடன்படைத்த வல்லபெரியோனே (௧௭௩)

வானம்புவியும் மலையுங்குகைகளுமாய்
தானமுடனமைந்த தக்கபெரியோனே (௧௭௪)

பாவியர்கள் தங்களுக்கும் பாரில்வினை செய்தவர்க்கும்
ஆதிதனைத்தொழுகா அநியாயக்காரருக்கும் (௩௭௫)

ஏழுநரகம் எளிதாய்ப்படைத்துவைத்து
வாழும்பெரிய வல்லவனைத்தான்நினைந்தார் (௩௭௬)

பொழுதும்நிலாவும் பொழுதிலெழுந்துவர
எழுவான்படுவானும் எகிவைத்தகர்த்தாவே (௩௭௭)

என்னைப்படைத்தவனே என்னுயிர்க்குவல்லவனே என்
தன்னைப்படைத்தவனே தடையேதுநானறியேன் (௩௭௮)

கண்டறியேவோமென்றுசொல்லி கானகத்திற்போகையிலே
நின்றுமறித்தார்கள் நெஞ்செறிரேகள்ளர்வந்து (௩௭௯)

பதினொருகள்ளர்வந்து பதிவாயிருந்துகொண்டு
பாதிவழிதனிலே பயலொருவனோடிவந்தான் (௩௮0)

வடமுகத்துப்பாதையிலே மதுரைவழிதனிலே
திடமுடனேபார்ப்பாரத்தேவியரைக்கண்டுநின்றான் (௩௮௧)

தருசாய்வழிநடந்து துலுக்கனவன்முன்னேவர
வரிசைபெற்றோர்பின்னேவழிநடந்தாள்பார்ப்பாத்தி (௩௮௨)

பார்ப்பாத்திபின்தொடர பாலன்நடந்தோடிவர
பார்த்துமேபட்டாணி பாதைவரக்கண்டுநின்றான் (௩௮௩)

கண்டுநின்றவேடன்மகன் காடோடிச்செடிநுழைந்தான்
வந்திருக்குங்கள்ளருக்கு வரவிதஞ்சொல்லிவிட்டான் (௩௮௪)

வரவிதஞ்சொல்லிவிட்டான் வகைமடிப்புப்பன்னொன்று
சேரவொருமுகமாய்ச் சேர்ந்தோடிவந்தார்கள் (௩௮௫)



கண்டார்மனதிலெண்ணி கள்ளனிவனெனவே
நின்றுபயந்தாக்கால் நெஞ்செறிரே கல்லெறிவான் (௩௮௬)

காட்டிலேவந்ததை கைகண்டவாறதுபோல்
கண்டிருந்தார்மன்னவரும் கல்புதனில்நினைந்து (௩௮௭)

நின்றுநடக்கையிலே நீதியுள்ளகன்னியர்கள்
கண்டுபயந்தார்கள் கள்ளர்தமைக்கண்டவுடன் (௩௮௮)

என்சாமிமன்னவரே எங்கள்துணைவந்தவரே
வம்பானகள்ளர்வந்துவழிமறித்தாலென்னசெய்வோம் (௩௮௯)

நீ ஒன்றுக்குமஞ்சாதே உங்களுக்குஉற்றதுணை
உன் கல்புக்குள்ளேயிருக்கும் கர்த்தாஉதவிசெய்வார் (௩௯0)

என்னைத்துணையெனவே எடுப்பாய்நடந்துவந்தாய்
என்துணையைநீக்கிவிட யென்னால்முடியாதே (௩௯௧)

என் சிவன்மடிந்தாலும் நான் செத்திறந்துபோனாலும்
சேர்ந்துவருஞ்சனத்தைச் சிறப்பாய்அனுப்பிவிப்பேன் ௩௯௨

என்னுயிருபுவியில் இருந்துமடிந்தாலும்
உன்னுயிரைக்காப்பாற்றி உங்களுக்கனுப்பிவிப்பேன் ௩௯௩

அல்லாவுக்காகவுங்கள் அபிமானங்காத்துவைத்து
கலமாகவுன்மனைக்கு நடத்திவைப்பேன்பெண்ணரசே (௩௯௪)

என்றுண்மையென்வார்த்தை யேகனுடகற்பனையாய்
என்மனதைநீயறிய இருசாமஞ்செல்லுமென்றார் (௩௯௫)

என்துணையால்வந்தவளை யிவர்நின்றுகொள்ளைகொண்டால்
அன்றவன்படுந்துயரம் ஆரறியப்போறார்காண் (௩௯௬)

மானமுடன் நீங்களுந்தான் மனதுவைத்தேயென் பிறகே
கானகத்திற் கூட்டிவந்து கைவிடவுங் காரியமோ (௱௯௭)

வேதத்தாலுள்ளபடி வெட்டிவழிகூட்டிவந்து
ஆடாத்துத்தப்பாமல் ஆட்டிவைப்பேன் கள்ளர்களே (௱௯௮)

சொல்லிவழிநடந்து தொடர்ந்துவரும்வேளையிலே
கள்ளன்வந்து முன்மறித்துக் கல்லாலெறிந்துவிட்டான் (௱௯௯)

கல்லாலெறிந்தவனைக் கள்ளரடக்காள் நீங்களுந்தான்
கல்லுநினைவுகொண்டு காடுபோய்ச்சேருமென்றார் (௨00)

பொல்லாநினைவுகொண்டு புத்திகெட்டு நீங்களுந்தான்
கல்லாலெறிவனென்றே கைப்பற்றியில்லாதே (௨0௧)

தனித்துநான்வந்தேனே நடந்தனிலே கண்டீரோ
ஒளிந்திருந்து கல்லெறிந்தால் உலகத்துக்கேற்காது (௨0௨)

தனித்துவருவோரைத் தனிவழியிலே விரட்டி
அடித்துப்பறித்து அவருடைமைதின்றகள்ளர் (௨0௩)

மானமுள்ளபார்ப்பாத்தி மங்கையரைக்கூட்டிவந்தேன்
மானபங்கம்பண்ணவென்று மனதுவைத்தில்லாதே (௨0௪)

பின்னேநடந்தோடிவரப் பிறகேசனங்கள்வர
கல்லாலெறியாதே கானகத்துவேடர்களே (௨0௫)

அசட்டியேயிட்டவந்து ஆசைகொண்டு நீங்களுந்தான்
விரட்டிவந்துகல்லெறிந்தால் வினையாய்முடிந்துவிடும் (௨0௬)

ஆரையடா சொல்லுகிறாய் அதட்டி நீ பட்டாணி
பேதலித்துவாய்புலம்பிப் பேசுகிறாயுன்னைவிடேன் (௨0௭)



வலையில்கப்பட்ட மானதுபோல்நிற்குகிறாய்
வலையைவிட்டுப்போகுமட்டும் மருவிப்புலம்புகிறாய் (௨0௮)

கள்ளனவன்கோபமுடன் காட்டுமலைச்சாரியில்வந்தான்
சொல்லரியமன்னவர்மேல்தொடர்ந்துநின்றுகல்லெறிந்தான் (௨0௯)

கைகொண்டுகல்லெடுத்துக் கனத்ததொருகோபமுடன்
மெய்கொண்டமன்னவனை விட்டெறிந்தான்கல்லாலே (௨௧0)

கல்லாலெறியாதே சுடுநெருப்பிலேயெரிவாய்
பொல்லாநினைவுகொண்டால்புவியிலுள்ளோர்தாஞ்சிரிப்பார் (௨௧௧)

எறியாதேகள்ளர்களேயென்சொல்லைக்கேளீரோ
எதிர்த்துநிற்கும்வேடருக்கு என்னவரப்போறதுகாணும் (௨௧௨)

என்சொல்லைக்கேளீரோ யென்னருமைதோணலையோ
மன்னவரும்கள்ளருக்கு மதியெல்லாஞ்சொல்லிநின்றார் (௨௧௩)

வழியில்வரும்பட்டாணி வாயெடுப்புக்காரனிவன்
பழியெடுத்துக்கொண்டிடுவான் பட்டாணிநம்மையுந்தான்

ஆளுக்கொருவனைத்தான் தொடர்ந்துநாம்விட்டாக்கால்
வலிமைபலமுமென்ன வஞ்சியர்கள்தாமுமென்ன (௨௧௪)

வாயாலேதட்டுகிறான் வழியில்வந்தபட்டாணி
நாய்போல்பயந்தாக்கால் நடுவனத்தில்நம்மையிப்போ (௨௧௫)

பொன்னேட்டில்வைத்ததுபோல் பிரம்பாலடித்திடுவான்
இக்காட்டில்வந்தவனை யெடுத்தேறி நாமள்விட்டால் (௨௧௬)

நின்றுமனமஞ்சாமல் நெடுந்தூரம்போய்விடுவான்
நின்றுமயங்காமல் நினைவுகொண்டுகள்ளரெல்லாம் (௨௧௭)

கல்லாலெறியவென்று கடுங்கோபங்கொண்டார்கள்
கல்லுங்காட்டாலே கைப்பிடித்தஆயுதத்தால் (௪௫௧)

கள்ளர்மக்களெல்லோருங் கற்கொண்டெறியுமுன்னே
மன்னவருஞ்சக்கரத்தால் ஒருமன்னவனைவிட்டெறிந்தார்

குடல்சரிந்துகீழேவிழ கொண்டைமயிர்குலைய
இடத்தில்நின்றகள்ளரெல்லாம் இனிவிடுவதில்லையென்றார்

இனிவிடுவதில்லையென்று யெதிர்த்துநிற்கும்வேடனைத்தான்
வலதுகையிற்சக்கரத்தால் வந்தவனைவிட்டெறிந்தார் (௪௫௨)

வந்தவனைவிட்டெறிய மண்டையுடல்கீழேவிழ
வந்ததொருகள்ளனுக்கு வலதுகைபோனதுகாண் (௪௫௩)

பழியெடுத்தான்பட்டாணி பார்ப்பாத்திபார்த்துநின்றாள்
பழிகாரப்பார்ப்பாத்தி பழியெடுக்கக்கூட்டிவந்தாள் (௪௫௪)

சக்கரத்தால்மூன்றுகள்ளர் தலைசாய்ந்துவிழ்ந்தபின்பு
ஒக்கவந்தகள்ளரெல்லாம் ஓடிவந்தார்காட்டுவழி (௪௫௫)

ஓடிவந்தகள்ளரிலே ஒருவனவன்கோபமுடன்
பாடிவிட்டுஓடிவந்து பார்ப்பாத்திமேலடித்தான் (௪௫௬)

அடித்துநின்றுமயிர்பிடித்து அவளையவன்நின்றுதைய
துடித்துவிழபட்டாணி சூரியினால்குத்திவிட்டார் (௪௫௭)

இப்படியேநாலுகள்ளர் இக்குடனேதான்மடிந்தார்
சொற்பெரியமன்னவருந் தூரவழிபோகவென்று (௪௫௮)

சிங்காணிகைப்பிடித்துச் சிலையின்மேல்நாணிபூட்டி
அம்பறாக்கூட்டில்வைத்த அம்புரெண்டெடுத்து (௪௫௯)



என்துணையேகன்னியரே எழைமயில்வேதியப்பெண்
என்னுயிரைத்தான்படைத்த யேகபெரியவன்றான் (௪௬௦)

என்கல்புக்குள்ளேயிருந்துகாரணத்தைப்பண்ணிவைத்தான்
என்னருமையென்வார்த்தை யெப்பாகவுன்மனதில் (௪௬௧)

நன்றாகவுந்தனுக்கு நலமாய்த்தெரியுமென்றார்
பின்னுக்குயென்னருமை பேதையர்க்குத்தோன்றுமென்றார்

சேதுவழியைவிட்டு செடியைவிட்டுப்பின்னேக்கி
மாதுதனைக்கூட்டி மலைப்பாறைமீதில்வந்தார் (௪௬௩)

கற்பாறைதன்னிலேதான் கடுகிநடக்கையிலே
சொற்பெரியமன்னவரைத் தொடர்ந்துவந்தார்கள்ளருந்தான்

வேடர்மக்களெல்லோரும் விரட்டிவந்துபாறையின்மேல்
ஓடிவந்துபாறையின்மேல் உவந்துநின்றுகல்லெறிந்தான்

பாறையின்மேல்வந்துநின்று பார்புகழும்மன்னவர்மேல்
கோறல்செய்யவேணுமென்று கூடியேகல்லெறிந்தான் ௪௬௬

கன்னியர்கள்பின்நடக்க அந்தக்காரணவர்முன்னடக்க
கன்னியரைப்பார்த்தல்லவோ கால்பார்த்துக்கல்லெறிந்தான்

மெள்ளமெள்ளத்தானடந்த மொட்டைப்பிராமணத்தி
முழங்காலொடிந்ததென்று முகத்திலறைந்துகொண்டாள்

என்செய்வேனன்றுவே யிந்தயிடமிவான்நம்மைவந்து
இவர் சொன்னமொழிகேளாமல்தொடர்ந்துவந்துகல்லெறிந்தான்

என்னுடையபிள்ளைரெண்டும் என்துரையேஅன்றுவே
கண்ணாலேநீர்பெருகி கதறுதுகாணென்னசெய்வேன் (௪௭௦)

அண்ணாவேயென் துரையே அருமையுள்ளமன்னவரே
பின்னாலேவந்தகள்ளன் பேதலிக்கப்பண்ணுகிறான் (௩௭௧)

வம்புபட்டகள்ளரின்மேல் வரிசைபெற்றமன்னவரும்
அம்புதொட்டெய்தாரே அங்கொருவன்கீழ்விழுந்தான்

கீழ்விழுந்தகள்ளனையுங் கிட்டவந்துபாராமல்
வேலெடுத்தோடிவிட்டான் வெற்றிகொள்ளவந்தகள்ளன்

கன்னியிளமயிலே காரிகையேபெண்ணரசே
கடுகிநடந்துவரக் கருத்திலையோ உங்களுக்கு (௩௭௪)

நல்வார்த்தையாமெனவே கேட்டார்மகிழ்ச்சியுடன்
பொல்லாங்கனுகாத புறவல்லாரைப்பின்தொடர்ந்து (௩௭௫)

தவித்துநின்றகள்ளரெல்லாந்தலைகெட்டோடிவந்தார்
மகிழ்ச்சியுடனடந்தார் மன்னவரும்முன்னடந்தார் (௩௭௬)

கல்லெடுத்துக்கைப்பிடித்துக் கடுந்தூரம்பார்த்துநிற்க
வில்லெடுத்துஅம்புதொட்டு வேகமுடனெய்துவிட்டார்

எய்துவிட்டஅம்புறுதான் இளவயிற்றிற்பாய்ந்தோடி
அம்புவெளிப்பட்டபின்பு அரசன்மகன்கீழ்விழுந்தான் (௩௭௮)

அரிசிவளிஅம்மானை அங்குநின்றுதானினைத்து
பிரியமுடனிருக்க பிறைமோசம்வந்ததுகாண் (௩௭௯)

வழியில்வரும்பட்டாணி வாயேற்றப்பண்ணிவைத்தான்
பழியெடுக்கநீயிருந்து பார்த்திருக்ககாரியமோ (௩௮0)

வழிதொடர்ந்துகூட்டிவந்து வதைசெய்பட்டாங்கள்வந்தோம்
பழியெடுத்துக்கொண்டுவிட்டான் பட்டாணிராசனையும்



சொல்லிநின்றுவாதாடித் தொடர்ந்துநிற்கும்வேடனைத்தான்
கள்ளிமரமீதில்நின்று கைநீட்டியெய்துவிட்டார் (௩௮௨)

வில்வளைத்துஅம்புதொட்டார் ஒருவேடனுக்குப்பாய்ந்தோடி
ஆள்பலத்தாலெய்த அம்போராசனைத்தான்பாய்ந்ததுகாண்

பதினாலுகள்ளரிலே பாதிச்சனமடிந்தோம்
பாதிச்சனமடிந்து நம் பதிதனக்குப்போனக்கால் (௩௮௪)

கள்ளர்சிரிப்பார்கள் கடுங்கோபமாய்ச்சினந்து
கள்ளர்வந்துதாவிகட்டுங் கன்னியர்கள்சோறுகொடார்

பின்னுக்கினிபாரு நம் பிள்ளையர்க்குப்பேச்சாகும்
மண்ணுக்குள்நம்மை மதியாரினியொருவர் (௩௮௬)

நாடுகிடுகிடுங்கும்நல்லூர் நாட்டார்க்குமேற்காது
காடுமரங்களெல்லாம் கர்மமோவென்றுசொல்லும் (௩௮௭)

பாடுபட்டுப்போகப் பழியெடுத்தான்பட்டாணி
நாடுமட்டுந்தானறியக் கட்டத்திவைத்தான்பார்ப்பாத்தி (௩௮௮)

பட்டதெல்லாம்வீணாசப் பழியெடுத்தான்பட்டாணி
துஷ்டனென்றுபேரெடுத்துத் தொடர்ந்துவந்தகள்ளரெல்லாம்

நின்றுஅவன்பாஷையிட்டு நேருடனேவேலெடுத்து
வண்டூலமிட்டாற்போல் வழியில்வந்துபார்த்துவிட்டேன் ௩௯0

பாடிவிட்டுவேடர்மக்கள் பாதைதனில்நின்றுகொண்டு
ஓடியொருவேடன் ஒளித்திருந்தான்காடுதனில் (௩௯௧)

தாரமிழந்தவன்போல் தலைமயிரைச்சோரவிட்டு
சூரைச்செடியில் தூதுவனைப்போலிருந்தான் (௩௯௨)

பள்ளச்செடி நுழைந்து பாறையின்மேல்வந்திருந்து
கள்ளனவன்வேல்பிடித்து கடுமைவந்துகின்றுகொண்டான்

ஆறுபேர்கள்ளர்களும் அகட்டிவந்துகல்லெறிய
பேறுயர்ந்தகள்ளர்களும் பிதாமலம்புதொட்டு (௬௬௪)

அம்புதொடுத்துநிற்க அழகானபெண்கள்நிற்க
வம்புபடியெறிய வந்துமெள்ளத்தாறுருண்டான் (௬௬௫)

உருண்டுவந்துவேல்பிடித்து உயிரையவன்தான்வெறுத்து
புரண்டுமெள்ளத்தானெழும்பிப் பிசகாமலேயெறிந்தான்

வெற்றியுள்ளகாரணரைவேலாலெறிந்துவிட்டான்
புத்தியுள்ளகாரணரும் போட்டுவிட்டார்இங்காடி (௬௬௭)

சொற்பெரியமன்னவரும் சோர்ந்துமிகவாடி
மெய்ப்பெரியகற்பாறை மீதிலங்கேபோட்டுவிட்டார் (௬௬௮)

தண்ணீர்த்தவனமுடன் தனக்குவருத்தமதால்
எண்ணியதையுள்ளடக்கி யிருந்தாரப்பாறையின்மேல் (௬௬௯)

காயந்தனைப்பொறுத்தார் கருங்கல்லை அறுக்கிவிட்டார்
மாயம்போல்த்தண்ணீரும் வந்ததுகாண்பால்போலே (௬௭௦)

பால்போலேநீரோடப் பண்டைத்தோகைத்தாதிநின்று
வேலேந்துமன்னவரும் வெருதாகந்தாந்திர (௬௭௧)

தண்ணீர்குடித்துத் தாகந்தெளிந்தாறி
மன்னவரும்பார்ப்பார் மங்கையரேவாருமென்றார் (௬௭௨)

ஏழைமதியாலே யென்பிறகேவந்தபெண்ணே
பால்போன்றநீரையள்ளி உன்பாலனுக்குஊட்டுமென்றார்



ஊட்டுமென்றசொற்கேட்டு ஓடிவந்துநீர்குடித்து
காட்டிவிந்தப்பாடுபடக் கர்த்தாவேபண்ணிவைத்தாய் ௬௭௪

சொல்லிமனங்கலங்கித் தோகையர்கள்நின்றழுக
நல்லவினைவுவந்து நாட்டமாய்ச்சேதிசொன்னார் (௬௭௫)

என்னைத்துணையெனவே யென்துணையாய்வந்தபிள்ளை
என்னுயிரையிவ்விடத்தி லேகனமைத்ததினால் (௬௭௬)

வல்லோன்மகிழ்ச்சியினால் மலைப்பாறைதன்னிலேதான்
வல்லோனமைத்தபடி வரிசைபெற்றேனிப்புவியில் (௬௭௭)

தீனோர்க்குநாயகமாய்ச் சேர்ந்தார்சுபர்க்கார்
வானோர்புகழ மன்னர்சகிதானோர்கள் (௬௭௮)

மன்னர்சகிதானோர் மங்கையர்களெல்லோரும்
கன்னல்மொழிமாரும் காளையரும்நின்றழுக (௬௭௯)

நின்றழுதமங்கையரை நீதிகெட்டகள்ளருந்தான்
கொண்டையிலேகைபோட்டுக்கொண்டுவந்தார்பாறைவிட்டு

கள்ளர்மக்காள்எங்களைநீர் கடுகியிழுத்துவந்து
கொள்ளைசெய்யவேணுமென்றால் கொண்டுபோங்கள்ளர்களே

மண்டலத்திலெங்களுக்குத்தான் வழிந்துணைக்குக்கூட்டிவந்த
கொண்டுவந்தமன்னவரைக் கொலைபுரிந்தீர்வேலெறிந்து

கைகொண்டவாறுச்சுக் கையுடமைகொள்ளைகொள்ள
மைபோன்றகூந்தல் மடவாரணிந்திருந்த (௬௮௩)

காதோலைசிந்தாக்குக் கடுகுமணித்தாவடமும்
சாதாசிகப்பிழைத்த சரியானமேல்முருகும் (௬௮௪)

சீரகப்பூமுத்துவடமுஞ் சிறப்பாளபொற்காரை
மார்புதனிற்பூண்டுவரும் வங்காளங்கொத்துமணி (௮௫)

இட்டழகுபார்க்கும் இன்பமுள்ள அட்டியலும்
கட்டுமணித்தாவடமும் கைசிறைத்தமோதிரமும் (௮௬)

காலாழிபீலியுடன் கால்கிண்கிணிதமோதிரமும்
மேலானகல்லிபெற்ற விளையாடும்பிள்ளைதன்னை (௮௭)

சேரமதலைசைகப்பச் செப்பாகத்தான்பிடித்து
காரைதனைபொடித்தான் கைகாப்புந்தான்பறித்தான் (௮௮)

பொட்டிருந்தமாறுடிப் பொன்முருகுகொள்ளையிட்டான்
பொன்முருகுகொள்ளையிடப் பூவையர்கள்தானெழுந்து

இந்தக் கர்மவிதிக்கேதுசெய்வேன் கட்டழகானென்றுசொல்லி
கர்மதுணையைத்தானினைந்து சத்தமிட்டாள் (௯0)

ஐயோவிதியெனவே அபயமிட்டுக்கன்னியரை
கையிற்பிடித்தானே கள்ளனவன்கூட்டிவந்து (௯௧)

குழந்தைப்பயலொருவன் கொடும்பாவிவேடன்மகன்
வளமையறியாத வண்டப்பயலொருவன் (௯௨)

பெண்ணுனபெண்களைத்தான் பேதலிக்கக்கூட்டிவந்து
புடவைகளைக்தானே பொல்லாக்கொடும்பாவி (௯௩)

விதும்மகொலங்கண்டாய் வேதத்தாலுள்ளபடி
விரட்டித்துயிலுரிந்து விற்மணமாய்விட்டாயே (௯௪)

மானமுள்ளசாதியைத்தான் மரியாதைதாழ்ச்சிபெண்ணி
மானபங்கப்பண்ணியிப்போ மனங்கலங்கப்பண்ணுதே (௯௫)



கும்பிடுந்தெய்வத்தைக் கூட்டிவந்தோம்நாங்களுந்தான்
வம்புசெய்துகள்ளரெல்லாம் வதைசெய்தீர்பாதகமாய்

பாதகத்தால்நீங்கள் படும்பாடறியாமல்
பேதலிக்கப்பண்ணுதே பேதையென்றேதானறிந்து (௯௭)

இந்தமொழிவாய்திறந்து இளமயிலாள்சொல்லுமுன்னே
வந்துநின்றகள்ளரெல்லாம் வாயிலறையுமென்றார் (௯௮)

துலுக்கன்பிறகாலே துணிந்துவந்தநீலியைத்தான்
மெலுக்காகவைப்பதென்ன வெட்டியெறிகானகத்தில் (௯௯)

பேதையிளமயிலைப் பிடித்திழுத்துக்கொண்டுவந்து
காதையறுத்துக் கழுப்போடவேணுமென்றார் (௱)

பிள்ளைதனைக்கூட்டிவந்து பெரியதொருகானகத்தில்
கல்லாலேதானெறிந்து காட்டுவழிதாக்குமென்றார் (௱௧)

எங்கள்மனதெரிய நாங்கள் இதுமயக்கங்கொண்டுநிற்க
எங்களுடமையெல்லாம் எடுத்தெங்கேபோகுகின்றீர் (௱௨)

நாங்கள்படும்பாடயிந்த ஞானிலத்தில்வேடர்களே
நீங்களனுபவிப்பீர் நீதிகெட்டகள்ளர்களே (௱௩)

சொல்லிநின்றுவாதாடித் தோகையிளமயிலாள்
கள்ளிமரமீதிருந்து கர்த்தாவைத்தானினைந்தாள் (௱௪)

மகிழ்ச்சிகெட்டகள்ளருக்கு மாயவினைபோலாக
தவித்துநின்றுகண்கள்கெட்டுத்தடவுகின்றார்கள்ளரெல்லாம்

கண்ணைமறைத்துவிட்டார் கையுடமைபோட்டுவிட்டார்
தன்னைமறந்துவிட்டார் தலைவிதியோவென்றழுதார் (௱௫)

சிறிவசமோவென்றுசொல்லி ஒருவேலமரத்தடியில்
பதிவிருந்தகள்ளன் பாதைதனைப்பார்த்திருந்தான் (௪௰௭)

காடுசெடி புள்ளுகளும் காட்டிலுள்ள நாலுகளும்
ஓடிப்போடிப்பார்க்கவென்றும் ஒன்றுந்தெரியவில்லை (௪௰௮)

விட்டிலிருந்துவந்து வெற்றிகொள்ளவந்திடத்தில்
காட்டிலிருந்ததெல்லாம் கண்ணாவித்தவிக்கைதயென்ன (௪௰௯)

மன்னுமலங்கிநின்று மனவெளில்விழுந்தழுதான்
தனதுமகிழ்ச்சிகெட்டுத் தடவிடுவம்புகிறான் (௫௰)

தடவிப்புலம்பித் தான்மயங்கிவேடரிருக்க
படைவைதனைவெடுத்துப் பொட்டெனவேசுட்டிவின்றான் (௫௰௧)

கன்னாவித்தகள்ளரெல்லாம் கல்லிலிப்புரண்டார்கள்
பொன்னுடைமைமற்றதெல்லாம் பொட்டெனவேதான்னெடுத்து

ஆத்திமரத்தடியே அமர்ந்திருந்துபால்கொடுத்து
வாழ்த்திமனமுவந்து வழியிலிருந்துகொண்டாள் (௫௰௩)

எடுப்பாகவந்தகள்ளர் எட்டுநியவழுங்களுக்கு
கடுப்பானதுதன்னில்வா கஞ்சிருக்கும்பாம்பாளே (௫௰௪)

ஏழையெளியவரை நீங்கள் இனிவந்துகொள்ளையிட
பேழைதனிலொடுங்கும் பெட்டிப்பாம்பானீரே (௫௰௫)

கல்லார்வனந்தனிலே நாடிவருங்காளகத்தில்
கல்லெடுத்துக்கையில்வைத்துக் கண்டவரையின்றெறிய

மண்டலத்தில்தான்பிறந்து மடியழிந்தீர்வேடர்களே
கண்டமன்னரேதெதிர்த்து கைசேதமாளுமே (௫௰௭)

116520



வேடரென்றுபேரெடுத்து வெற்றிகொண்டுபோசவந்தீர்
ஓடநிலைமைகெட்டு ஒதுங்கிநிற்கும்வேடர்களே (௫௰௮)

பாடுபட்டுத்தின்னப் பயனறியாக்கள்ளர்களே
கேடுகெட்டுநீங்களிப்போ கிடந்துருளக்காரியமேன் (௫௰௯)

உங்கள் தலைவிதியோ உங்களுள்ளவிதிப்படியோ
வந்தவரைக்கொள்ளையிட வனந்தனிலேகண்ணவிந்தீர் (௬௰)

இந்தவனந்தனிலே ஏகுவோர்தங்களைத்தான்
தந்துசெய்துகொள்ளைகொள்ளுந் தலைகெட்டவேடர்களே

கொந்துகளில்தானிருந்து கொள்ளையிடுங்கள்ளர்களே
வந்துபலித்ததென்று வருத்தப்படுவதென்ன (௬௰௨)

மாறுமலிவ்வனத்தில் வழிகூட்டிவந்தவர்தான்
போராகவுங்களுக்குப் பெருங்கீர்த்திபண்ணிவைத்தார் (௬௰௩)

மாறுதசொல்லுடையோர் வழியில்வந்தமன்னவர்தான்
காராதபிமானங் காத்துவந்தாரெங்களையும் (௬௰௪)

அபிமானங்காத்துவந்த அன்னையரைத்தானடித்தீர்
பழியாகவந்ததடா பழிகாரரவுங்களுக்கு (௬௰௫)

வேதமுடிபொருந்து மேலோனைத்தான்பணிந்து
நாடிவரும்மன்னவரை நான்பணிந்துகூட்டிவந்து (௬௰௬)

கூட்டிவந்துகூட்டமிட்டுக் கொலைசெய்தபாவமிது
தேடிப்பிடித்ததுபோலுந் திசைகெட்டுமாறிநின்றீர் (௬௰௭)

பாதைபயந்திருந்தோம் இந்தப்பாதைவழிக்கள்ளருக்கு
மார்பேந்திக்கூட்டிவந்த மன்னவரைக்கொன்றுவிட்டீர்

கட்டெணிவல்லயத்தால் கைகட்டிக்கொண்டயழி
இட்டெனயேகண்மாவிக்று சிசிப்புக்கேடமாவிர்கள் (௫௩௰)

பேருருப்காடும் பெருகிவளர்கல்லூரும்
கல்லூரின்காட்டார்க்கும் இந்த காவினத்திருள்ளவர்க்கும்

மாருதசொல் உடனே மகிழ்ச்சிபெறவந்தபடி
சீதானமுள்ளவரே செய்தபழிகண்டீரோ (௫௩௧)

விதியால்முடிந்ததென்று மேலோனைத்தேடுகின்றீர்
பதிதெரியாக்கள்ளரெல்லாம் பலவிதமாய்நின்றழுக (௫௩௨)

கொள்ளைகொடுத்திருக்கும் கோதைநின்றேதிட்டிவிட்டு
சொல்லிதைந்துவிட்டுத் தோதையர்கள்சாலைவிட்டு

சொற்பெரியமன்னவனைச் சொந்தமுடன்பார்க்கவென்று
கற்பானாமீதுதிக் கடுகெட்டுவந்தாள் (௫௩௩)

மன்னவனைப்பார்க்கவென்று மனங்கலங்கிமங்கைநல்லாள்
அன்னையரைப்பார்க்க அழுதுவந்தாள்பார்ப்பார்த்து (௫௩௪)

அழுதுவந்தாள்பார்ப்பார்த்து அவனுடன்பாறையின்மேல்
பழுதுபட்டாப்பாறையின்மேல் பார்த்தாள்படுகளத்தில் (௫௩௫)

படுகளத்தில்பார்த்த மன்னர் பாறையின்மேல்தோன்றுமல்
நடுநடுங்கிநின்றழுதுநாடித்திகைத்துநின்றாள் (௫௩௬)

பிள்ளையழுகப் புறகேசனமழுக
சொல்லுகந்தமன்னவரோ என்சொல்லுக்குடையவரோ

என்கண்ணேநவமணியே காரனோடொப்புள்ளவரே
பின்துணையேமன்னவரே எங்கேயிருக்கார்த்தவரே (௫௩௭)



பெண்ணுயிரைக்காப்பாற்ற பெருவனத்தில்போராடி
தன்னுயிரைத்தான்கொடுத்த தார்வேந்தேயென்துணையே

மாயனென்றுயெந்தன் மதலைதொடர்ந்துவர
சோமனெழுந்தாப்போல் சொற்பெரியமன்னவரே (௫௪௧)

மதிமயங்கிநின்றழுதாள் மதியுள்ளவேதியப்பெண்
சதிமோசம்வந்ததென்று தானழுதார்மங்கையர்கள் (௫௪௨)

கானகத்தில்கூட்டிவந்து கள்ளர்தமைச்சூறையிட்டு
மானமறுகாத்துவைத்த மன்னவரேயென்கோவே (௫௪௩)

காணுமல்நின்றழுதாள் கண்விழிகளொந்துகொண்டு
வாணுருகுவித்த வனமெல்லாய்பார்த்துவந்தாள் (௫௪௪)

கணணில்வருமுருவங் கண்மீதில்தோன்றியித்த
வண்ணக்கருங்கூந்தல் மலர்சோரநின்றழுதாள் (௫௪௫)

காடுதனில்கண்மணியே கர்த்தாவிதிப்படிபோ
பாடுபடயெங்களைத்தான் படைத்தவனேபார்த்திருந்தாய்

வள்ளால்கபிபோர் மாவடவுடன்கொள்ளைகொண்ட
கள்ளர்தமைச்சூறையிட்ட கானகத்தில்நின்றழுதாள் ௫௪௭

காடெராமுங் கானகத்தில்புல்பூண்டும்
வான்டமயிலினங்கள் வந்துநின்றுதான்பார்க்க (௫௪௮)

ஐவாய்மிருகம் ஆனைகரடிபுலி
கைகால்பதறியோடக் கானகம்விட்டோடியதே (௫௪௯)

இந்தப்படியே இளமயிலாள்நின்றழுக
வந்துநின்றபேர்களெல்லாம் மாற்றிவிட்டார்கண்ணீரை

மலையுருகியிந்த மண்டலத்திலுள்ளதெல்லாம்
தலைமேலே கையைவைத்துத் தானழுகின்றதுகாண்

பார்த்தாலைதானினைந்து பாங்கியெனும் மங்கையர்கள்
கர்த்தாவேயென்றுசொல்லிக் கன்னியர்களின்றழுதார் (௫௫௪)

பெண்கள்கைகொள்ளே கொண்ட பெரும்பாவிக்கள்ளனைக்
கண்தெரியாவேடரெல்லாம் கலங்கிநின்றுமெய்யுரைசொல்வார்

தாய்தகப்பன்தேடிவைத்த சகலமுதலத்தனையும்
நாமெடுத்துப்பார்க்கவென்றால் நாட்டிலொருசாமியில்லை

முன்னாலேதேடுகின்ற முதல்கொடுத்துப்பார்க்கவென்றால்
பின்னாலேநாமறியப் பேர்போனசாமியில்லை (௫௫௫)

ஆடுடனேமாடும் ஆண்டகிலம்விற்றாலும்
பேருடனேகண்கொடுக்கப் பெரியவொருசாமியில்லை (௫௫௬)

காடுடனேயாண்டிருக்கும் காய்மரங்கள்விற்றாலும்
நாட்டியக்கண்கொடுக்க நாட்டமுள்ளதெய்வமில்லை (௫௫௭)

பேராய்மதுரைவளர் பெரியவொருமீனாட்சி
சீராய்த்துணையிருந்தும் செல்வியுமகன்றுவிட்டாள் (௫௫௮)

உடுக்கெடுத்துக்கைப்பிடித்து ஒய்யியடிக்குமுன்னே
இடுக்கமறச்சேதிசொல்லுந் தெய்வம்மறைந்ததுகாண் (௫௫௯)

மலைமேலேநாதரென்றும் வைத்திருந்தோர்நாங்களுக்குத்தான்
மலையைவிட்டுக்கீழிறங்கி மண்டலத்திற்போய்மறைந்தார்

காத்திருந்ததெய்வத்துக்கு காட்டுமரைருத்திவைத்து
சேர்த்துகிடாய்பூசை செய்ததுவும்வீணாச்சே (௫௬௧)



இந்தப்புவிமீதிலிருக்கின்ற செல்வமெல்லாம்
வந்தவிதம்போலே வழிபார்த்துச்சென்றதுகாண் (௫௬௨)

தொல்லைவந்தநம்மளுக்குத் தொடர்ந்துபிடித்ததென்று
வல்லையென்றுசொல்லி மறுதேசம்போனதுகாண் (௫௬௩)

வேலெடுத்துக்கைப்பிடித்து வெற்றிமயிலேறிவரும்
வேலரும்போயோடிவிட்டார் வெட்டவெளிக்கானகத்தில்

காத்திருந்ததெய்வமெல்லாங் கையுடைமைவாங்கித்தின்று
பார்த்துப்பழிக்கிறது பறக்கப்போய்கின்றதுகாண் (௫௬௫)

முன்னிருந்ததெய்வமென்று முட்டியழுதாலும்
கண்கொடுக்கமாட்டார்கள் இந்தக்காரணமேயல்லாமல் (௫௬௬)

ஏழைமதிப்பட்டகள்ளர் இப்படியேவாய்புலம்ப
கோழைமனதுடைய கோதையர்கள்காத்திருந்தார் (௫௬௭)

தெங்கைக்கடல்போலே கீர்த்தியுள்ளமன்னவரும்
செங்கோல்தழைக்கவந்த செல்வநபிபேரர் (௫௬௮)

கர்த்தனருள்பெற்றவரும் கலைதனிலேநினைந்து
சுத்தமுள்ளபார்ப்பாரத் தோகையர்கள்முன்னாக (௫௬௯)

வர்ணக்கவுசுதொட்டு வருகும்வழிமறித்து
கன்னியர்கள்முன்னாகக் கஞ்சாச்செடியருகே (௫௭0)

வந்துநின்றுமன்னவரும் மங்கைதனைக்கோபமிட்டார்
சொந்தமுள்ளபார்ப்பாரத்தோகைமுகம்பாராமல் (௫௭௧)

வாடும்பயிர்தனக்கு மழைபெய்துவாரதுபோல்
நாடிவந்துகள்ளரிடம் நாட்டமுடன்சேதிசொன்னார் (௫௭௨)

கும்பிட்டுக்கையெடுத்துக் கொற்றவனோங்களுந்தான்
வழிவிட்ட கள்ளருடன் வழிபோறோம்மன்னவரே (௮௯௩)

கானகமுந்தான்கடந்து கள்ளர்பத்துநாடுவிட்டு
மாநகருந்தான்கடந்து வழி நாடிவந்துவிட்டார் (௮௯௪)

வைகைக்கரைகடந்து வழிஊரில்நானிருந்து
வையைகடந்துவந்து பாண்டியத்தில்நீர்முழுகி (௮௯௭)

கொக்குக்குடிகிடக்குங் கோனாஞ்சிதான்கடந்து
மக்கள்கண்டோடிவர வயலூரிற்போய்ச்சேர்ந்தார் (௮௯௫)

தங்கள்மனைபுகுந்து தாவிமனந்தேளிந்தார்
மங்கைமனைபுகுந்து மதிபோல்விளக்கேற்றி (௮௯௯)

கையெடுத்துக்கும்பிட்டுக் காரணரைத்தானினைந்தாள்
வையகத்தில்காண்ணாறை மைந்தனுக்குப்பேரிடுவேன் (௯00)

எங்கள்கவலைகண்டு யெளிசாக்குங்காரணரே
பங்குமனையுள்ளதெல்லாம் பாருலகில்விற்றுவந்து (௯0௧)

மன்னவரேஉங்கள்பதி வருகுஞ்சனங்களுக்கு
தண்ணீர்குடிக்கத் தருமங்கட்டிவைப்பேனென் (௯0௨)

சொல்லிமனமகிழ்ந்து சோறுகறிறின்றபின்பு
கள்ளர்தமக்குக் கைகழுவநீர்வார்த்தாள் (௯0௩)

சோறுகறியிட்டுச் சொளகுதனிலேந்திவந்து
சோரர்பதிநீர்சொகுசுடனேதான்கொடுத்தாள் (௯0௪)

ஞேத்துடன்நடந்து நீபோவெனவுரைத்தாள்
பாரமலைக்கள்ளனவன் பயபாகத்தானெழுந்து (௯0௬)



விடியவிடியமட்டும் வெகுநேரந்தான்விழித்து
விடியுமுன்னேதானெழுந்து வெகுதூரம்வந்துவிட்டான்

பதியுங்கடந்துவிட்டான் பாங்கானஊர்கள்விட்டான்
விதியின்படியாலே வெகுதூரம்வந்துவிட்டான் (௯0௭)

ஓடிவந்தவேடன்மகன் ஓரிடமுந்தங்காமல்
நாடிவந்துகள்ளர்முன்னேநடந்ததெல்லாஞ்சொல்லிவின்முன்

கலியுகத்துச்சிமையிலே கள்ளர்புலிகாட்டிலேதான்
வழியில்வந்தமன்னவரை வந்துசதிசெய்துவிட்டோம் (௯0௯)

இந்தப்படியாகவும் ஏழுபேர்கள்ளருடன்
பெண்கள்பெறும்பிள்ளையெல்லாம்பெயரிடுவோமென்றுசொன்னார்

கானகமும்ஊரும் கலியுகத்துச்சிமைகளும்
வானம்புவியும் மலைகளுமுள்ளமட்டும் (௯௧௧)

சந்திரனுஞ்சூரியனும் இந்தத் தாரணியிலுள்ளமட்டும்
தந்திரமும்அக்கினியும் தண்ணீருமுள்ளமட்டும் (௯௧௨)

பெற்றபெற்றபிள்ளையெல்லாம்போரடிமையென்றுசொன்னார்
சுற்றஅடிமையென்று சொல்லியேகள்ளரெல்லாம் (௯௧௩)

கையெடுத்துக்கும்பிட்டார் கர்த்தாவேயென்றுசொல்லி
வையகத்தில்காட்சிபெற்ற மன்னர்தனைநினைந்து (௯௧௪)

மன்னன்முத்துமுகம்மதுக்கு மனமுவந்துவந்திருந்து
அன்னகத்தில்வைத்ததுபோல் அடித்தவிருங்கள்ளருக்கு

கண்வெளிச்சமாக்கிவிட்டு காரணருந்தான்மறைந்தார்
கண்தெரிந்தபோதே கள்ளர்மனமகிழ்ந்து (௯௧௫)

கள்ளர்பத்துநாட்டாரும் காரணத்தைத்தாக்கினார்கள்
நல்லதினைவுடனே காட்டார்க்கும் ஆனதுப்பா (௬௧௭)

ஓட்டமாய்ஓடி உண்மையுள்ளநாட்டாரை
காட்டாரைக்கூட்டி நடத்திப்பிங்கேவாருமென்றார் (௬௧௮)

கள்ளனவன்ஓடிவந்து காரணங்களுள்ளதெல்லாம்
நல்லாருநாட்டார்க்கும் நட்புடனேசொல்லினின்றான் ௬௧௯

காரணத்தைக்கேட்டவுடன் கள்ளர்பதிநாட்டார்கள்
சோரொருமுகமாய்ச் சிறப்பாகவோடிவந்தார் (௬௨0)

காரணத்தாலப்புதுமை கண்டதில்லையென்றுசொல்லி
பார்த்துமேலதனைப்பண்பாகவார்த்துகொண்டு (௬௨௧)

காட்டிலேகண்ட காரணங்களுள்ளதெல்லாம்
எட்டிலேதானெழுதி நந்தாரொருவனிடம் (௬௨௨)

திருமயத்துப்பேட்டை சிறந்திருக்குந்தீனோர்க்கு
திருப்பமதைக்கொடுத்து விரைவாய் நடந்துவாருமென்றார் ௬௨௩

ஒருவனவனோடி ஊர்வழியாய் நடந்துவந்து
திருமயத்துப்பேட்டைத் தீனோர்முன்கொண்டுவைத்தான்

ஓலைதனையெடுத்து உறவுமுறையாரெல்லாரும்
ஓலைவரிப்படியே உள்ளதெல்லாந்தான்பார்த்தார் (௬௨௫)

காரணமுங்காட்சிகளும் கள்ளர்பட்டமுகளும்
பாராளவந்தமன்னர் பார்ப்பாரப்பெயர்களுக்கு (௬௨௬)

கலையாகவந்ததுவும் தொடர்ந்தடித்ததுவும்
கல்லாலெறிந்துவந்தகள்ளர் கண்கெட்டுநின்றதுவும் (௬௨௭)



கல்லெறிந்துநின்றதுவும் கள்ளர்மடிந்ததுவும்
வில்லெறிந்துநின்றகள்ளர் விழுந்துதெண்டனிட்டதுவும்

ஓலைவரிப்படியே உள்ளதெல்லாம்வாசித்தபின்
சோலைதனக்கேக சொல்லிவிட்டார்ஊரவர்க்கு (௬௨௯)

திருமயத்துப்பேட்டைத் தீனோர்மனமகிழ்ந்து
அருமையுடனெல்லாருங் அங்குவந்துகூட்டமிட்டார்

சிறப்பாய்ப்புடவைகளுஞ் சிறுமாவுஞ்சந்தனமும்
சிறப்பாகஉள்ளதெல்லாம் தேடியவர்வாங்கிவந்து (௬௩௧)

மாலைமலர்களுடன் வாசமுள்ளசாம்பிராணி
சோலைதனில்மாண்டவர்க்குசொருகூடனேவேணதெல்லாம்

ஏற்கவேவாங்கி யெல்லோரும்போகவென்று
மார்க்கமுடன்தீனோர்கள் வரவழைத்தார்ஓட்டர்தம்மை

மண்வெட்டிகோடாரி மார்க்கமுள்ளதட்டுமுட்டு
தன்மையுடன்கொண்டு தானெழுந்தார்தீனோர்கள் (௬௩௪)

திருமயத்துஊருவிட்டு சேதுவழிதானோடி
உரிமையுடன்தீனோர்கள் உகந்துநடந்தார்கள் (௬௩௫)

பட்டணமுந்தாங்கடந்து பறளிமலைச்சார்புதனில்
சட்டமுடன்தீனோர்கள் சகலசனங்கள்வர (௬௩௬)

கர்த்தனருள்பெற்றுவந்தோர் கல்புதனிலேசேர்ந்து
தெற்குத்திசையிருந்து சேதுமன்னர்வாறதுபோல் (௬௩௭)

பாளையக்காரரைப்போல் பரிநடத்திவந்தார்கள்
ஆலவட்டஞ்சூழ்ந்துவர அனுமக்கொடிபறக்க (௬௩௮)

வெற்றிக்கொடிபறக்க வெண்சாமரம்வீச
பச்சைக்கொடிகள் பறந்துமுன்னேநாலும்வர (௬௫௯)

சூரியமுன்னபோல்மின்போற் சூழ்ந்துவரப்பாவாடை
வெற்றியுள்ளவெள்ளானை வேகமுடன்தானும்வர (௬௬0)

வந்தார்புரவியின்மேல் வானோர்களெல்லாரும்
சென்றாரெழும்பிச்சேதுவழிதான்மறைய (௬௬௧)

காரணங்கள்போலக் கானகத்துப்பாதையிலே
வீரருடன்வெள்ளானை விரைவாய்ப்பரிகளுடன் (௬௬௨)

மதுரைத்திசையிலுள்ள மன்னர்துரைகளுந்தான்
சதுரானவேட்டை தானடிவாரதுபோல் (௬௬௩)

கானகத்தைதாடிவரக் கண்டார்கள்தேனோர்கள்
வானகத்தைவிட்டுவந்த வானோர்பரிகளுடன் (௬௬௪)

தாசமுடன்மன்னவரைத் தானெடுத்துயெல்லோரும் (௬௬௫)
மேகம்பார்த்ததுபோல் விண்மீதிலேமறைந்தார்

ஆனதொருமெய்யை அகமகிழ்ந்திக்காரணத்தை
தேனோர்கள்தங்களுக்குச் சேதியெல்லாஞ்சொல்லிவந்தார்

இவ்வுலகமெல்லாம் இறையோன்பதிபெற்று (௬௬௭)
எவ்வுலகஞ்சென்றாரோ எங்கள்பெரியோர்

வந்தடக்கவர்தோமே இவ்வெல்லாம்மைக்காரிவர் (௬௬௮)
எந்தவிதமென்று இவர்களெல்லாம்பேசயிலே

கள்ளரெல்லாங்கூடியிந்தக் கானகத்துப்பாதையிலே
கள்ளர்மரத்தடியிற் கனகூட்டமாயிருக்கார் (௬௬௯)



கள்ளர்தலைமைக்கண்டு காரணங்களுள்ளதெல்லாம்
சொல்லுகந்தகாட்சிபெற்ற துப்பபுகழ்மன்னவரை (௬௭0)

வில்லெரிந்துகொன்றவிதங்களைநீர்சொல்லுமென்றார்
கள்ளர்மனமகிழ்ந்து கருத்தாயெழுந்திருந்து (௬௭௧)

சொல்லுகந்ததீனோரே துப்பாவனந்தனிலே
செல்வமுள்ளமன்னவரின் சேதியெல்லாங்கேளுமென்றார்

சேதுவழிபோனவரைச் செடியில்விரட்டிவந்து
சேதப்படுத்திவிட்டோம் செடியில்வந்துமன்னவரை (௬௭௩

காரணவரொன்றிருந்தால் கள்ளரெல்லாங்கூட்டிவந்து
காரணத்தைக்கண்டவுடன் கையெடுத்துக்கும்பிடுவோம்

வந்தபிராமணத்தி வழிபிசகாச்சொன்னாலும்
சொந்தமுள்ளஆண்டவர்க்குத் துணையாகசென்றிடுவோம்

வானப்புவியும் வாழ்ந்திருக்கும்நாள்முதலாய்
கானகத்திலிப்புதுமை கண்டதில்லைநாங்களுந்தான் (௬௭௬)

கள்ளர்மடிக்கதினால் கனகோபந்தானாகி
செல்வமுள்ளமன்னவரைத் திசைநோக்கிக்கூடிவந்து (௬௭௭)

கற்பாறைமீதேறிக் கடுகிவழிபோகையிலே
சொற்பெரியமன்னவரைத்தொடர்ந்துசதிசெய்துவிட்டோம்

எங்கள்பிழைபொறுத்து எங்களுக்குக்கண்கொடுத்தார்
பெண்களுக்குமார்பேர்திப்பொன்னுயிரைத்தான்கொடுத்தார்

பொன்னுயிரைத்தான்கொடுத்த புகழ்ப்பெரியமன்னவரை
மன்னவரைநீங்களிப்போ வழியிலடக்குமென்றார் (௬௮0)

தீனோர்கள்சேர்ந்துவந்து தீரமுள்ளகள்ளர்களோ
மானமுள்ளமன்னவரை வந்துமெள்ளக்காட்டுமென்றார்

கள்ளர்களுந்தானெழுந்து கற்பாறைமீதேறி
மன்னர்படுகளந்தை வந்துமின்றுகாட்டிவிட்டார் (௬௬௨)

காட்டிவிட்டகள்ளரவர் கண்டுநின்றார்பாரைதனை
மீட்டியுள்ளமன்னவரே மீதிலிங்கேகாணோமென்றார் (௬௬௩)

இரத்தம்பரிந்தோடி நிலமெல்லாந்தான்பாய்ந்து
கர்த்தனருள்படியே காய்ந்துகிடக்கிறதும் (௬௬௪)

கைகொண்டதிக்கிவிட்டுக் கற்பாறைமீதிலேதான்
மெய்யாகநீர்குடித்த விதமுந்தனையறிந்தார் (௬௬௫)

சட்டைதலைப்பாவுந் தன்னுடையமேற்சோமும்
பட்டபடுகளத்தில் பாங்காய்கிடக்கிறதும் (௬௬௬

பொன்னனமேனியிலே பூக்கொண்டெறிந்தாற்போல்
மன்னவரும்சொர்க்கமானிலத்தில்போய்ச்சேர்ந்தார் (௬௬௭)

வரக்கண்ணுடையோரே வந்தடக்கவந்தோமே
பரக்கத்துடன்வானப்பதிசேர்ந்தாரென்றுசொல்லி (௬௬௮)

பாதமுடன்சிங்காடி பாங்காயெடுத்துவந்து
பாதைவழிதனிலே பண்பாயடக்கவென்று (௬௬௯)

கழுவிக்குளிப்பாட்டி கபன்றுடித்தீனோர்கள்
தொழுதுதுவாவோதிச் சுகமாயடக்கிவைத்தார் (௬௭0)

கோரியலங்கரித்துக் கொடியொன்றுகட்டிவைத்தார்
பாரிலுள்ளோர்தாமறியப் பாங்காயடக்கிவைத்தார் (௬௭௧)



சந்தனமும்பன்னீருஞ் சவ்வாதுஅத்தர்பூமல்லும்
வந்திருந்ததீனோர்கள் வாசமலர்போட்டுகின்றார் (௬௭௨)

வல்லோனைத்தானெழுந்து வந்தவர்களெல்லாரும்
நல்லோர்கள்பாதமதில் நாடியேதீனோர்கள் (௬௭௩)

பாத்திகாவோதிப் பணிவாகநின்றுகொண்டு
கொத்தியுடனெல்லோரும் நினைத்தாரொருசேதி (௬௭௪)

பேருப்புகழுடைய பெரியோர்கள்வாசலுக்கு
மாறாமல்வாங்குசொல்ல மன்னவர்கள்வேண்டுமென்றார்

அந்திப்படுமுன்னே அழகாய்விளக்கேற்ற
சந்திரனார்வேண்டுமென்று தாரணியோர்சொல்லலுற்றார்

காரணவர்பொற்பாதங் காத்திருந்துதாங்கூட்டி
வாரதொருகாணிக்கையை வகையாகத்தானெடுக்க (௬௭௭)

திருமயூர்தலெவ்வைதனை தீனோரகமகிழ்ந்து
அருமையுள்ளமன்னரிடம் அழகாயிருக்கவென்றார் (௬௭௮)

அந்தலெவ்வைதானெழுந்து அங்கிருக்குந்தீனோர்முன்
இந்தவனந்தனிலே யேதுங்கெட்டகானகத்தில் (௬௭௯)

இருக்கமனம்வாராது எவனையும்நீர்வையுமென்று
கருக்கமுடனவரும் சொன்னாரொருசேதி (௬௮0)

வந்திருக்கும்பேர்களுக்கு வரிசையுடன்நான்கொடுத்தேன்
எங்களுக்குயெல்லைதனை இல்லையென்றுசொல்லியிப்போ

சுத்தமுடனேலெவ்வையும் சுகஸ்தலிதமுடன்
கத்தெழுதிக்கைக்கொடுத்தார் கள்ளரெல்லாந்தாமறிய

காட்சியிவர்களென்று காட்சிவைத்துக்கள்ளர்தமை
பாங்கியவாறென்றெனவே பார்த்தழையுந்தீனோர்கள் (௬௮௩)

விசியார்மகனாரே இவ்வூரிலேயிருந்து
பசிரொருக்கிதில்வந்துபடைத்தோனைத்தான்றொழுது (௬௮௪)

சொந்தமுடன்வாங்குசொல்லியேறுந்தொருத்தும்
வந்தவர்க்குச்சேதிசொல்லி மாகிலத்திலேயிருந்து (௬௮௫)

காணிக்கைவந்ததெல்லாம் காத்திருந்துதானெடுத்து
தானேபசியாறிச் சக்காத்துச்செய்யுமென்றார (௬௮௬)

சொல்லிமுடித்தார்கள் சூழ்ந்திருந்ததீனோர்கள்
கல்லூரைச்சேர்ந்தால நாட்டார்மனமகிழ்ந்து (௬௮௭)

அரிசிகறியுடனே ஆட்டுக்கிடாய்தான்கொடுத்து
வரிசைபெறக்கந்தூரி வைத்துஉண்ணுந்தீனோர்கள் (௬௮௮)

மன்னர்பேர்சொல்லி மகிழ்வாகசோறாக்கி
வண்ணமுடன்தீனோர்கள் வகையாய்ப்பசியாறி (௬௮௯)

வேதமுணர்ந்த வேதாப்பர்தங்களுட
பாதந்தனைப்பார்த்து பாத்திகாவோதினார் (௬௯0)

ஏசாத்தொழுதபின்பு விளிப்படுப்போமென்றுசொல்லி
ஏசாஒருத்தில் இவிபதொருவாங்குசொன்னார் (௬௯௧)

வாங்குமொழிசொல்லியபின் வந்துநின்றுதீனோர்கள்
பாங்காகவேகூடிப் படைத்தோனைத்தான்றொழுதார் (௬௯௨)

தொழுதுசலாங்கொடுத்துத் துய்யவனந்தனிலே
பழுதபடாக்கோரிதனில் படுத்திருந்தார்தீனோர்கள் (௬௯௩)



பேராய்ப்புகழ்படைத்த பெரியோனருளாலே
மாறுவரிசைபெற்றோர் வந்தார்மினுமியத்தில் (௬௯௪)

வெள்ளானைமுன்னடக்க வெண்சாமரைவீச
பல்லக்குமீதேறிப் பார்த்திபனார்வந்துநின்றார் (௬௯௫)

தங்கக்கொடிபிடிக்க சருவதொனிமுழங்க
சிங்காரமேனியுடன் ஜிப்பாபளபளென (௬௯௬)

வானிலிருந்துசொர்க்க மங்கையர்கள்சூழ்ந்துவர
தீனோரொலியான செய்யதொலிவந்துநின்றார் (௬௯௭)

வெவ்வைதலைமாட்டில்வந்து நின்றார்மகிழ்ச்சியுடன்
வெவ்வையவர்கண்டார் சோாய்மினுமியத்தில் (௬௯௮)

வையகத்தில்தின்விளைத்த வள்ளல்நபிபேரனையும்
கைகட்டிநின்று கண்டார்பெரியோரை (௬௯௯)

எங்கேவந்தீர் எங்கள் இரசூல்குலத்துதித்த
தங்கமணிவிளக்கே சாய்பிரசூல்பேரரேநீர் (௭00)

எந்தநகரிருந்து எங்குவந்தீர்மன்னவரே
வந்திருக்குங்காரணத்தை வரிசையுடன்சொல்வீர்கள் (௭0௧)

தேசத்திலுள்ள சிறப்பானதீனோரே
வாசமுடன்நானிவடம் வந்தவிதம்சொல்கிறேன்கேள் (௭0௨)

மகரிபத்துத்தேசம் வாழ்ந்திருக்கும்லாகுநகர்
சிகரப்பதிதனிலே சிறப்பாகநான்பிறந்து (௭0௩)

இந்தப்பதிநாடி இந்தவழிவந்திடத்தில்
சொந்தமுடனெந்தனுக்கு சுவர்க்கப்பதிதான்கொடுத்தான்

என்னைப்பெற்றெடுத்தவன்தான் இந்நிலத்திலேயிருக்கச்
சொன்னமொழிகேட்டுத் அப்போனிருவைபெற்றேன் (௭௦௫)

பெற்றுவளர்த்தார்கள் பெரியோருதவியினால்
கர்த்தனருளாலே கானகத்தில்வந்திருந்தேன் (௭௦௬)

சீர்பெருகுந்தீனோர் சிறப்பாகவேயழைக்க
பேர்கொடுத்தாரெந்தனுக்குப் பெரியோனருளாலே (௭௦௭)

தேசத்திலுள்ளோருஞ் சிறப்பாகவந்தழைக்க
வாசமுள்ளசையிதுதாலி வசவாசிவாருமென்றார் (௭௦௮)

பேர்கொடுத்தார் எந்தகப்பன் பெற்றெடுத்ததாயாரும்
பேருபெற்றேன் கானகத்தில் பெரியோனருளாலே (௭௦௯)

சொந்தமுள்ளகாரணத்தைச்சொன்னாரிருமியத்தில்
வந்திருந்ததீனோர்கள் மகிழ்ச்சியுடன்தானெழுந்து (௭௧௦)

பழுதுபடாதீனோர்கள் படைத்தோனைத்தான்றொழுது
பொழுதுவிடியுமுன்னே புறப்பட்டார் தீனோர்கள் (௭௧௧)

குயிலினங்கள்கின்று குலாவும்வழிகடந்து
மயிலினங்கள்கூவியபின் மலையிடம்போய்ச்சேர்ந்தார்கள்

சந்தோஷமாகச் சகலசனங்களுக்கும்
வந்திருந்தோர்காட்சிபெற்றார் வல்லோனருளாலே (௭௧௩)

காட்சியுள்ளகாரணங்கள் காதினுற்கேட்பவர்க்கு
மீட்சியுள்ளசொர்க்ககர் மேலோனுந்தாங்கொடுப்பான்

எத்திசையிலேயிருந்து எருதோட்டித்தீனோர்கள்
வெற்றியையுங்கொண்டேத்தி விதிவழியேபோகையிலே (௭௧௫)



கானகத்தில்மாடுவரக் காலோய்ந்துபாடுவிழ
வானிற்கதிர்மறைய வனத்திலமயங்கிநின்றார் (௭௧௬)

உற்றதுணையாக உறமுறையார்தாம்போக
கர்த்தன்விதியென்றுசொல்லிக் கண்ணுறங்கும்வேளையிலே

பூரணமாய்மாடெழுப்பிப் பொதியெடுத்துமேற்போட்டு
காரணமாய்வந்துநின்று கைகொண்டுதானெழுப்பி (௭௧௮)

மங்கைதனைகார்த்துமகிழ்வாய் அனுப்பிவைத்த
சங்கையுள்ளமன்னவரும் தடத்துவழிகூட்டிவிட்டார் (௭௧௯)

வெற்றியுள்ளகாரணத்தை வெற்றியையும்விற்றபின்பு
புத்தியுள்ளோரெல்லார்க்கும்புகழ்ச்சியுடன்சொல்லுகின்றார்

வாசமுள்ளசாம்பிராணி வகைவகையாய்ப்பூமாலை
நேசமுடன்சர்க்கரையும் நேர்மையுடன்தான்வாங்கி (௭௨௧)

வேதமுணர்ந்தோனை விரைவாகத்தானழைத்து
பாதமதில்கொண்டுவைத்துபாத்திகாவோதிவைத்தான் (௭௨௨)

முப்பதுபொன்காணிக்கையும் முடிப்பாகத்தான்செலுத்தி
தப்பிதமில்லாதபடி தடம்நோக்கித்தானடந்தான் (௭௨௩)

காரணவரானகபிபிறகுல் போருட
காரணத்தைக்கேட்டு கடுவனத்திலுள்ளதெல்லாம் (௭௨௪)

பேய்கரடிகாட்டானை பெலத்தகொருசிங்கமெல்லாம்
வாய்வரண்டோடிவிட்டு வழிதிகைத்துஓடிவிட (௭௨௫)

பூலோகந்தன்னிலேபுகழ்ந்திருக்கும்பேய்களெல்லாம்
மேலோகம்போய்விழுந்து விண்ணில்மறைந்ததுகாண் (

மாயவயிற்றுவலி வஞ்சனைகள்சூனியங்கள்
மாயமுடன்மறைந்து மண்ணிற்புகுந்துவிடும் (௭௫௭)

காதிறுக்கேட்டிருந்து கண்ணிரண்டுங்குருடான
கோதைமயிலியவள் குழந்தைதனை முன்னேவிட்டு (௭௫௮)

பூதமதில்வந்து படிகொட்டுக்கண்ணில்வைக்க
கோதைதனக்குக் கொடுத்தாரேகண்வெளிச்சம் (௭௫௯)

பிள்ளைவரங்கேட்டுப் பெண்மயிலாள்வாசல்வர
பிள்ளைவரங்கொடுத்தார் பேருருங்காட்டிய (௭௬௦)

மதுரைப்பதிவாழும் மாகாட்டுப்பாண்டியனும்
குதிரைத்தளத்துடனே கொற்றவனுந்தேவியுமாய் (௭௬௧)

மைந்தன்வரங்கேட்க பாவாஒலிதானும்
கெங்கைக்கடல்போல கீர்த்தியுள்ளமன்னவரும் (௭௬௨)

பூங்காவிற்பூவெடுத்துப் பெண்மயிலாள்முன்னேவந்து
பாங்காய்மடியிலிட்டு பதிசேருமென்றுசொல்லி (௭௬௩)

மங்கைதனக்கு வரங்கொடுத்தாரன்றிரவு
செங்கோல்தழைக்கவந்த செய்யதிருகுல்பேர் (௭௬௪)

மண்டலத்தில்வில்விஜயன் மன்னன்ரெகுநாதேந்திரன்
கொண்டல்நிகர்கரத்தான் கோமானெனும்வேந்தன் (௭௬௫)

பாளையமுஞ்சேனையுடன் படைமன்னர்தம்முடனே
சாலைவழிவந்தார் சகலவிருதுடனே (௭௬௬)

திருமயத்தில்வந்திருந்து சேதுபதிக்காளனுப்பி
தருமதுரைவாரதடத்துவழிபார்த்திருந்தான் (௭௬௭)



வந்தார்மறவர்களும் வன்னியருங்காலாளும்
செந்தாமரைபோன்ற செல்வமுள்ளதேவர்களும் (௭௬௮)

பதினாயிரம்பேரும் பவனிசங்குத்தேவனுமாய்
குதிரைகரியுடனே கொற்றவனும்வந்திறங்கி (௭௬௯)

விந்தையுள்ளமேலூர் வெளிதனிலேவந்திறங்கி
சந்திப்புப்பண்ணித் தடந்தனிலேபோகையிலே (௭௭௦)

ஆனைபசியாலே அரசமரத்தில்வந்து
தானேகொழையுருவித் தன்கையால்வாயிலிட (௭௭௧)

ஆனைகுடல்பிரட்டால் அவ்விடத்திலேவிழுக
ஆனைமேலேறிவந்த அரசன்பயந்தொடுங்கி (௭௭௨)

காதவழிகஸ்தூரி கமழும்நபிபேரர்
பாதமதிற்போய்விழுந்தான் பவனிசங்குத்தேவனுந்தான்

ஆனையெழுந்தாலயிநூறு பொன்னெடுத்து
தானேகொடுப்பனென்று தாழ்ந்துமுடிசாய்த்தான் (௭௭௪)

குயில்கூவும்வாசற் கொற்றவனார்முன்பிருந்த
மயிலிறகுகொண்டுவந்து மதயானைமேல்வீச (௭௭௫)

மதயானைதானெழுந்து மண்டலத்தில்நின்றவுடன்
பதமாகத்தானரசன் பார்த்தெடுத்தான்பொன்காசு (௭௭௬)

ஐநூறுபொன்னெடுத்து அரசன்மகன்தானெழுந்து
கைநீட்டிஉண்டியலில் கனிவாகத்தான்செலுத்தி (௭௭௭)

வேதமுணர்ந்த வெற்றியுள்ளோர்தங்களுட
பாதமதிற்போய்விழுந்து பவனிசங்குபோய்ச்சேர்ந்தான்

இருமலிலோப்பும் ஈளைவலிநோயும்
குஷ்டநோயுங்குட்டமுடன் கொடியபெருநோயும் (எஎகூ)

ஆசியிறசூல்பேரர் அழகானநாயகரை
காதில்விழக்கேட்டால் கடியிற்போய்விழுந்திடுமே (எ௮0)

வேளாளப்பொன்னுருத்தி யெந்தனிழக்கன்னியவள்
தோழன்மனையகிழ சொந்தமுள்ளமைந்தனுக்கு (எ௮க)

காத்திருந்தாளுர்மையுடன் கன்னிதிருமுலாள்
காத்திருந்தமங்கையர்க்கு கைக்குழந்தைதந்தேனென்றார்

காட்சிதனைக்கேட்டதொரு கர்த்தனருளாலே
மீட்சிபெறவாழ்ந்திருக்க மேலோனுதவியினால் (எ௮௩)

இப்பு துமையெல்லாம் இறைவனருளாலே
சொற்புதுமையாகவந்த சொர்க்கநாதியர்க்கு (எ௮ச)

கோரியலங்கரித்துக் கொலுமுகப்புக்கட்டவென்று
மாரிமழைபெய்து மாநிலத்தில்விழுந்தபின்பு (எ௮ரு)

சித்தமிகமகிழ்ந்து சிறப்பாகத்திரேர்கள்
கொத்தர்தமையழைத்துக் கொலுமுகப்புக்கட்டவென்று

செங்கலறுத்திப்போது சிறப்பாகப்பள்ளிகட்ட
தங்கமற்கொத்தர்களைத் தான்கூட்டிவாருமென்றார் (எ௮எ)

திருமயக்குக்கோட்டைத் திரேர்வரிடத்து
அருமையுடன்கொத்தர்களை அழைத்துவந்தாரவ்வணத்தில்

மதுவாநகராதியர்கள் மனமகிழ்ந்தங்கிருந்து
விசையர்மகன்தனக்குமியல்பானகள்ளருக்கும் (எ௮கூ)



சொல்லியனுப்பிவைத்தார் அப்போர்மற்றுள்ளவர்கள்
நல்லதென்றுதானும் நாட்டார்மனமகிழ்ந்து (எகூ0)

கள்ளர்மனதுடனே காடுவெட்டவந்தார்கள்
முள்ளடர்ந்தகாடுவெட்டி மேடுவெட்டித்தாம்பரப்பி (எகூக)

வில்விசையரெல்லாரும் வெகுதாபமாயெழுந்து
செல்வமனைதனிலே தெற்குவடக்காக (எகூஉ)

எற்றுநூல்போட்டு இயல்பாகக்கள்ளர்வந்து
பத்திநிரையுடனே பளிங்குமாமண்டபமும் (எகூ௩)

சித்திரத்தூண்காலணியாய் சிறப்பாகநூல்போட்டு
சுற்றிக்கிடங்குவெட்டிச் சுண்ணாம்புநீரறைந்து (எகூச)

செங்கற்சுவரேற்றிச் சிறப்பாகச்சாந்துமிட்டு
மங்காமல்குப்பாவும் மற்றுமுள்ளசித்தெடுப்பும் (எகூரு)

சித்திரம்போல்முத்தொளியாய் சிறப்பாயலங்கரித்து
சுத்தமுள்ளகாரணர்க்கு சுற்றிவரமண்டபமும் (எகூசா)

பக்கீர்கொலுமுகப்பும் பாரமணிமண்டபமும்
நிக்கீர்மவுலூதுகள் சேர்ந்தோதமண்டபமும் (எகூஎ)

வசந்தமணிமண்டபமும் மாணிக்கத்தூண்நிரையும்
சேர்ந்தகுளக்கரையுஞ் சிறப்பாகக்கட்டிவைத்தார் (எகூஅ)

கொங்குடனேடில்லியெல்லாம் குணமாய்க்கடந்துவந்து
மங்காமல்வாழுமெங்கள் பாவாசாபள்ளியின்மேல் (எகூகூ)

தங்கக்குடமெடுத்துச் சங்கையாய்க்கொண்டுவந்து
திங்கட்கிழமைதன்னில் தினகூடியேற்றிவைத்து (எள0)

மங்காமணிவிளக்கும் மாணிக்கப்பூவிளக்கும்
சிங்காரமாகவெகு செடிவிளக்கும்யேற்றிவைத்தார் (எக)

சப்பிஇல்லாதமற்மாதம் விறைந்தபுரைதனிலே
தப்பிதங்களில்லாமல் சாய்பவர்கள்வாசலிலே (எஉ)

வெடியுடனேமத்தாப்பும் வெளிச்சமுடன்நின்றோர்கள்
கொடியேற்றிவைத்தார்கள் கூடிவெகுநின்கூறி (எ௩)

பேர்பெருகுமந்தப்புறைகள்பதினைந்துகளில்
சீர்பெருகுமன்னவர்க்குஞ் செல்வக்குருவென்றுர் (எச)

சுந்தரமாய்க்கண்ணாடி சுகமான அப்றேக்கால்
செந்தூரரேக்குடனே சிங்காரக்கூடமைத்து (எரு)

விந்தையுடனெல்லோரும் வெகுசோபனங்கூறி
சந்தனக்கூடெடுத்தார் சகலவிருதுடனே (எசா)

எழுவான்படுவானும் ஈரேழுலகமெல்லாம்
பழுதுபடாநின்றோர்கள் படைத்தோனருளாலே (எஎ)

தெற்குவடக்குத் திசைகிழக்குமேற்குமட்டும்
திக்குத்திசையிலுள்ளோர் சேரமனதாந்து (எஅ)

காரணத்தைக்கேட்டுக் கல்புகளிகூர்ந்து
வாசனங்களுந்தான் மண்ணிலிடங்கொள்ளாது (எகூ)

பட்சமுடன்சையதொலி பாதந்தனைப்பார்க்க
நிட்சயமாய்க்கோடிசனம் சேர்ந்துவருவாரும் (எஅ0)

கூடிவருவாருங் குழந்தைவரங்கேட்பாரும்
தேடிவருவாருஞ் சிறப்பாய்நடப்பாரும் (எஅக)



நாடிவருவோர்சேர்ந்த நாட்டந்தனையறிந்து
தேடிவரங்கொடுத்தார் சையதொலிபாவாவும் (எஅஉ)

பிள்ளைவரங்கேட்டுப் பிருத்தம்பிமரைக்கான்
சொல்லையுகந்த துரைமன்னர்வாசனுக்கு (எஅ௩)

பேர்புகழும்நின்றோர் பெரியோர்களுமறிய
பேர்பெரியகல்ல பெரியமரம்வாங்கிவந்து (எஅச)

கப்பான்கவுந்தடனே காவியாமேல்மரமும்
சப்பிரமாய்நின்றேந்த சம்மந்தாடிக்கவும் (எஅரு)

தல்பக்கறுக்கொடியுந் துலங்கும்பூலாக்கொடியும்
கல்புக்கிசைந்ததொரு காரணவர்வாசல்முன்னே (எஅசா)

வல்லோன்புகழ்ச்சிபெற்று வசதலிவாசலிலே
நல்லோர்புகழுடனே நாட்டமாய்கொண்டுவந்து (எஅஎ)

வருதைப்பதியுடையோன் மன்னர்கட்டுமாகுடியான்
பெரியோனருளாலே பிருத்தம்பிமரைக்கான் (எஅஅ)

கெடியுடனேமேளம் கீர்த்தியுடனேதொனிக்க
கொடியேற்றிவைத்தானே குழந்தைவரங்கேட்டு (எஅகூ)

வாழ்த்திவரங்கேட்டுஅவர் வாசல்தனில்வந்தவர்க்கு
கீர்த்தியுடன்காரணமாய் நெஞ்சந்தனில்மகிழ (எகூ0)

வாய்ந்ததென்றுசையதொலி பாவாமனமகிழ்ந்து
காட்சிகொடுத்தார் காரணத்தாலுள்ளவர்தான் (எகூக)

காரணமுங்காட்சிகளுங் கண்டஅதிசயமும்
பூரணமாய்நெஞ்சில்வைத்துப் புகழ்விடுதியானுர்கள் (எகூஉ)

போனவல்லாரும் பெரியதொரு மண்டபத்தில்
மாறாதசொல்லுடைய மன்னவரைத்தானினைந்தாள் (௯௩)

பாரமுடன் கள்ளர்வரும் பாதையிலே கூட்டிவந்து
காரணத்தைக்காட்டிவைத்த கர்த்தாதனை நினைந்தாள் (௯௪)

மாமனென்றுசொல்லிமெய்த்தன் மதலையதொடர்ந்துவர
மாங்கனிகள்தாங்கொடுத்த மன்னவரைத்தானினைந்தாள்

கண்ணை மறைத்துவைத்தார் கானகத்தில் கள்ளருக்கு
கண்ணைத்திறந்துவிட்டகர்த்தாவைத்தானினைந்தாள் (௯௬)

கள்ளர்துணைகூடிக் கனவலிடம்போய்ச்சேர்ந்த
தெள்ளுமணிப்பார்ப்பாரத்தேவியருந்தானினைந்தாள் (௯௭)

அன்னம்போல்நடையுடையாள் அழகானவேதியப்பெண்
கன்னல்மொழியுடையாள் கணவனுக்குயேதுரைப்பாள்

உன்னருமையாலே உகந்துபெற்றபிள்ளையெண்டும்
மன்னவர்தம்பேர்களிட்டு மகிழ்ந்துரைத்தெங்காலவேளை௯௯

மகிழ்ந்துரைத்தாள்முதலாய் வல்லோனருளுடைய
புகழ்ந்தழகியான புரவலர்கள்தன்னருளால் (௱)

உன்னிடத்தில்வாழ்ந்திருந்து உகந்திருக்குங்காலத்திலே
கன்னிபெறும்பெண்மயிலை கனிவுடனேபெற்றெடுத்தேன்

பெற்றெடுத்தநாள்முதலாய் பெரியோனருளாலே
உற்றதொருபாலகனை உகந்துநான்பெற்றெடுத்தேன் (௱௨)

கல்புமிகமகிழ்ந்தகாரணவர்தன்னருளால்
செல்வமுள்ளமைந்தர்களை சிறப்பாகப்பெற்றெடுத்தேன்



காரணத்தோர்தங்களுக்குக் கைபோட்டவார்த்தையினால்
சேரமதலைகளைச் சேகரமாகமறைத்து (௱௪)

பேர்பெரியோர்வாசலுக்குப் பிரியமுடன்நாமுஞ்சென்று
பேர்கொடுப்போம்மைந்தருக்குப் பெரியோனருளாலே

புருஷனிடஞ்சேதிசொல்லிப் பெண்மயிலாள்பார்ப்பாத்தி
வரிசைகொண்டுநாமிருவர் வழிநடக்கவாருமென்றாள் (௱௬)

என்கணவாமன்னவரே என்னருமையுள்ளதுரை
கண்ணருமைபெற்றவர்க்குக் காணிக்கைவேண்டுமென்றாள்

தட்டான்தனையழைத்துத் தங்கப்பூமாலைதன்னை
திட்டமுடன்பூமாலைச் சிறப்பாகச்செய்யுமென்று (௱௮)

பொன்னுருக்கிவார்த்துப் புகழ்பெரியகாரணர்க்கு
பொன்னாலேபூமாலை புகழுடனேதானமைத்தான் (௱௯)

வெள்ளிதனையுருக்கி விதவிதமாய்க்காரணர்க்கு
வெள்ளிப்பூமாலைகளும் விதவிதமாய்ச்சேகரித்தான் (௱௰)

சிங்காரமாம்பு சிறந்தமிதியடியும்
மங்காமணிவிளக்கும் வரிசைபெறத்தானமைத்தான் (௱௰௧)

சக்கரமுங்கொண்டியுடன் சமுதாடுபொன்விசிறி
பக்கமிருந்துபணிதியுடன் செய்துவைத்தான் (௱௰௨)

அரிசிகதிசாமானும் அமைத்துவைத்தபொன்னகையும்
வரிசையுள்ளமன்னவர்க்கு மூட்டிகட்டுவிட்டாள் (௱௰௩)

காரணமாய்க்காட்டிபெற்ற காரணவர்தங்களுக்கு
காணிக்கைவைக்கவென்று கலிநாலுபொன்னெடுத்தாள்

மன்னவரேயெங்கணவா மனவாளர்நீருமிப்போ
உன்னுடையபிள்ளைகளை உகந்தழைத்துவாருமென்றாள்

புருஷன்தனைக்கூட்டிப் பிள்ளைகளைமுன்னேவிட்டு
வரிசைகொண்டுமன்னவர்க்கு வழிநடந்தாள்பாற்பாத்தி

பொய்யுரையார்வாசலுக்கு புகழ்ந்துவழிநடந்து
வையகத்தோர்கடந்தோர் மண்டபந்திலவந்திருந்து (௮௧௭)

அன்றிரவுதங்கி அவர்கள்படுத்திருக்க
மன்னவருங்கன்னியுடன் மனவாளன்முன்னேவந்தார் ௮௧௮

கண்டான்மினுமியத்தில் இந்தக்காரணவர்யாரெனவே
நின்றுஅவன் கையெடுத்து நெடியமலர்த்தாள்பணிந்தான்

என்சாமிமன்னவரே என்குருவேயென்துரையே
பொன்னொளிபோலெங்கே புறப்பட்டுவந்தீர்கள் (௮௨௦)

உன்னுடையபெண்சாதி உகந்துபெற்றபிள்ளைரெண்டும்
இன்னஞ்சிலபெண்களுடன் இருந்தவனத்திலிருந்த (௮௨௧)

காளிருக்குமூருவிட்டு காடுவழிபோகவந்தேன்
தாளிருக்குமூருவிட்டு நடத்திலவர்தின்றுகொண்டு

காளகத்தில்கள்ளருக்கும் கரடிபுலியாம்பலாக்கும்
தான்பயந்துமெய்ஞ்ஞெஞ்சிரே தாழ்ந்துநின்றாமங்கையர்கள்

பாலைநாடடந்துவந்தேன் மலைப்பதிநாடிப்போகவந்தேன்
கோதைவழிமறித்துக் குட்டிட்டுக்கையெடுத்தாள் (௮௨௪)

அன்னமேயென்துரையே அருமைப்பெரியவரே
உம்மாலேவாளிருக்கும் ஊர்போகவேணுமென்றாள் (௮௨௫)



பெண்கள்துணையுமில்லைப் பிறகேவருவாருமில்லை
உங்கள்துணையல்லாமல் உற்றுரொருவரில்லை (௮௨௬)

சொல்லிமனங்கலங்கித் துயரமுடனன்பிறகே
அல்லிக்கிளைகுழுந்தாற்போல் அடர்ந்துதொடர்ந்துவந்தாள்

கள்ளர்தாம்பெண்களையும் காட்டுவழிதான்தொடர்ந்து
கொள்ளையிட்டார்கள்ளரவர் கொன்றுவிட்டேனேழுயிரை

கள்ளர்களைக்கொன்றவுடன் கானகத்துவேடர்களும்
கொள்ளையிட்டாரென்னுயிரை கோதையர்கள்பார்த்துநிற்க

என்னையவன்கொன்றதினால் என்சிவனைக்கொடுத்து
உன்னுடையபெண்டுபிள்ளை உகந்துவந்தமங்கையரை ௮௩௦

கர்த்தனருளாலே உந்தன்கணவனிடஞ்சேருமென்று
உற்றசனங்களுடன் உகந்துதுணைகூட்டிவிட்டேன் (௮௩௧)

சேர்ந்தாளிணையிருந்தாள் செல்வரையுமின்றெடுத்தாள்
வாழ்ந்தாள்கணவனுடன் வையகத்தோருள்ளபடி (௮௩௨)

புருஷன்தனைக்கூட்டிப் பிள்ளைகளைமுன்னேவிட்டு
வரிசைகொண்டுநீங்கள்வர வழித்துணைக்குநானும்வந்தேன்

பார்ப்பான்விழித்தெழுந்து பாரிமனையாள்தனக்கு
காப்பாற்றுமன்னவரை கண்டவிதஞ்சொல்லிநின்றாள் ௮௩௩

பிரியமுடன்கணவன் பிள்ளைகளைக்கூட்டிவர
வரிசைகொண்டுமன்னவர்க்கு வழிநடந்தாள்பார்ப்பாத்தி

நடந்துபதிதேடி காடெல்லாந்தான்கடந்து
தொடர்ந்ததொருகல்லூருச்சோலையிலேபோயிருந்தான்

நதிதனிலேநீர் முழுகி நல்லூரிற்சோறாக்கி
பதிதனிலேபாலருடன் பார்ப்பாத்தியிருந்தாள் (௮௧௭)

சுத்தமுடன்மங்கையவள் சொல்லுரைக்கவேயிப்போ
மத்துறைநாள்ச்சென்று மனமகிழ்ந்துநீர்முழுகி (௮௧௮)

காணிக்குடையவர்கள் கன்னார்மனமகிழ்ந்து
மாநிலத்தில்லெவ்வைதனைமகிழ்வாகக்கூட்டிவந்தார் (௮௧௯)

கையெடுத்தார்களெல்லாரு கண்டுநின்றாள்பார்ப்பாத்தி
லெவ்வைதனையழைத்து நீர்வார்த்துப்பட்டதென்றாள் (௮௨௦)

கட்டுடனேயெல்லாரும் நல்லோரின்வாசலிலே
தப்பாவாய்க்கறி சுகமாய்ச்சமையுமென்றாள் (௮௨௧)

அரிசிகறிமற்றவையும் கூட்டுக்கிடாயுள்ளதுவும்
வரிசைபெறக்கறி வைத்தெடுங்கள்மன்னவர்க்கு (௮௨௨)

சோறுசமைத்தார் சுகமாகலெவ்வைநின்று
மார்புதனிற்சேலைகட்டி வந்துநின்றாள்பார்ப்பாத்தி (௮௨௩)

வந்தசனங்களையும் வகையாய்ப்பரியாற
சொந்தமுடனின்று சொன்னாளேமங்கையவள் (௮௨௪)

சாப்பிட்டுகையலம்பி சார்ந்தவருமோர்களுக்கு
கூப்பிட்டுத்தாம்பூலங் கொடுத்தாளேபார்ப்பாத்தி (௮௨௫)

ஏழைமதியா யிருந்தசோறத்தனையும்
ஏழையெளியவர்க்கு யெடுத்துக்கொடுத்துவிட்டாள் (௮௨௬)

வந்தசனங்களெல்லாம் மகிழ்ந்தபெயொழி
நின்றுநின்கூறி செடியோனைப்போற்றிசெய்தார் (௮௨௭)



ஏழையெளியவர்க ளின்பமாய்ச்சாப்பிட்டபின்
சோலைதனிலநின்று துவாச்செய்தாரெல்லோரும் (௮௨௮)

பிள்ளைகளைமுன்னேவிட்டு புருஷனையும்பின்னேவிட்டு
நல்லநதிதனிலே நடந்துபோய்நீர்முழுகி (௮௨௯)

முன்னாள்நிசயங்கள் முகமுகமாய்க்கண்டமங்கை
கண்ணூறேபார்க்கவென்றுகாணிக்கைகொண்டுவந்தாள் (௮௩௦)

அன்றுவைத்தகாணிக்கை அவர்பாதம்பார்க்கவென்று
பொன்னூலேகாணிக்கைபூமலர்கள்கொண்டுவந்தாள்

வாக்குமொழிதப்பாமல் மன்னவனார்தர்காவிலே
ஆக்குமப்புகழாக அருமையுடன்வந்துநின்றாள் (௮௩௨)

காணிக்கைகொண்டு அவர் காரணத்தைக்கண்டமங்கை
மாணிக்கப்பொற்பாதம்வந்துகண்டாள் பார்ப்பாத்தி (௮௩௩)

நாதனருள்பெற்ற நல்லவலிவர்சல்வந்து
பாதந்தனில்வந்துநின்று பாலருக்குப்பேருமிட்டாள் (௮௩௪)

காணிக்கையுள்ளதெல்லாங் காரணர்க்குத்தான்செலுத்தி
மாணிக்கப்பொற்பாதம் மகிழ்ந்துநின்றுகையெடுத்தாள்

வாழ்த்திமனமகிழ்ந்து வரிசையுள்ளபேருமிட்டு
போற்றுமவ்வூரார்சேர்ந்து புகழ்ச்சியாய்வாழ்ந்திருந்தாள்

நேர்ந்துவரங்கேட்டு நீதியுள்ளோர்வாசலிலே
சூழ்ந்துவருஞ்சனங்கள் தொழுதுதொலையாது (௮௩௭)

காதவழிதனிலே காணக்கத்தப்பாதையிலே
பாதைவருந்தோர்கள் பார்த்தார்கொடியாத்தை (௮௩௮)

கண்டார்கொடிமரத்தைக் காணகத்துப்பாதையிலே
நின்றுதவ்ரவோதி ரேரிட்டுப்பாதைவந்தார் (௫௯)

அலங்காரமானதொரு அரசாணும்மன்னருடை
பலன்காணவந்தவர்கள் பாத்திகாவோதிவந்தார் (௬௦)

நின்றதவரவோதி நீதியுள்ளவாசல்வந்தார்
கண்டுமனமகிழ்ந்து காட்சிபெற்றுசெல்லோரும் (௬௧)

காட்சியுள்ளோர்பாதம் கண்டுமனதுக்குற
மீட்சிபெற்றோமென்று சொல்லிமேலோனைத்தான்புகழ்ந்தார் (௬௨)

திக்குளெழுவாறுலகுக் கிசைமுழுதுங்கொண்டாடும்
மக்கபிமேபர் வரிசையுள்ளகாரணர்க்கு (௬௩)

கொடியேற்றும்நாள்பார்த்துக் கூடியேபக்கிர்கள்
படியேற்றமாகவந்து பள்ளிதனிற்கூட்டமிட்டார் (௬௪)

பக்கிர்கள்கூட்டம் பலவிதமாய்வந்திறங்கி
திக்கிர்வரிசையுடன் சிறப்பாய்முழங்குவதும் (௬௫)

சங்குமுழங்குவதும் சடைகள்மின்னிப்போவதும்
பங்குடனேசோறுகறி பருப்புமிட்டுக்குவதும் (௬௬)

ஆசனங்கள்போட்டு அதின்மேலிருப்பதுவும்
வாசமுடன்கஞ்சா வாங்கிக்குடிப்பதுவும் (௬௭)

சங்கீதவீணையுடன் தம்பூர்தனையெடுத்து
இங்கிதமாய்ப்பாடி இருக்கிறதிப்பேர்களும் (௬௮)

மொட்டைமொறுங்குபக்கிர் மேடியாய்க்கூட்டமிட்டு
சட்டமுடன்சோறுகறி தான்வாங்கியுண்பதுவும் (௬௯)



பட்டத்திலெவ்வைபுடன் பாரவுலமாக்கள்வந்து
சட்டமுடன்வந்திருந்து சாய்பவர்கள்வாசலிலே (௭௦)

பாரமவுலூதுகள் பாங்காக ஓதிநிற்க
வாரசனங்கோடி வந்துநின்றுபார்ப்பாரும் (௭௧)

பிள்ளைவரங்கேட்டுப் பெரியோரின்வாசலிலே
கல்லைவணங்குகின்ற காபர்கள்தாங்கூட்டமிட்டு (௭௨)

கண்ணினுமணியான காரணர்பொற்பாதமதில்
கண்ணியமுடையார்கள் கைகட்டிநிற்கிறதும் (௭௩)

தீதறப்புவிமீதி லிருக்குகின்றவர்த்தகர்கள்
வந்தார்சரக்குடனே வரிசைபெற்றோர்வாசலுக்கு (௭௪)

காட்சியுள்ளகாரணர்க்க கண்டுமனமகிழ்ந்து
தீட்சியுடன்விற்குகின்ற சரக்குவிதஞ்சொல்லுகிறேன்

வாசமுள்ளசாமபிராணி வகைவகையாய்ஊதுவத்தி
பாசமுடன்சந்தனம் பலவிதமாய்விலைகளும் (௭௬)

மல்லிகைப்பூவில் மலருமிருவாட்சிப்பூ
செண்பகப்பூநல்லரளி செவந்திப்பூநல்மலரும் (௭௭)

சிரணிமிட்டாய் சிறப்பானஅல்வாவும்
பூரணமாய்ச்சோமாசும் பொரிகடலைபால்காப்பி (௭௮)

கற்கண்டுசீனி கருப்புவெல்லம்சர்க்கரையும்
விற்குகின்றவாழை விதவிதமாய்நற்கனியும் (௭௯)

பாக்குமிளகுக்கு பலசரக்குமற்றவையும்
வாக்குடனேவிற்குகின்ற வர்த்தகர்களோர்கோடி (௮௦)

மலையுங்குறநாட்டு மான்பட்டுச்சேலைகளும்
விலையுள்ளமுத்துவர்ண மேகவர்ணக்கண்டாங்கி (௮௧)

தாழம்பூச்சேலையுடன் சரிபானைப்புடவை
வாழைப்பூக்கண்டாங்கி படிப்புடவைக்காசுகொட்டு (௮௨)

நகுதாவளையலுடன் கல்லபலசங்கமும்
சகுதியுடன்கையிலிட்டுத் தான்மடவாரோர்கோடி (௮௩)

விலைபாகவேண்டுமென்று விற்குங்கடைவீதிகள்தாம்
கலையுடனேகோடிசனங் கருணையுடன்கொள்ளுதும் (௮௪)

நீர்முழுகிவந்துநின்று நிலவர்ணப்பட்டுடுத்தி
மாவெடுத்துரொட்டிசுடும் மங்கையர்களோர்கோடி (௮௫)

திட்டமுடன்ரொட்டிசுடு திடமானசாம்பிராணி
கட்டளையாய்க்கொண்டுவந்து காணிக்கைசெய்வாரும் (௮௬)

ஆட்டுக்கிடாயறுத்து அழகாயச்சோறாக்கி
கேட்டமுடனளிப்பார் தேசத்துமங்கையர்கள் (௮௭)

சீனியுடன்சர்க்கரையுஞ் சிறந்தபுஷ்பமாலைகளும்
வாசமுள்ளசாம்பிராணி வாங்கிக்கொடுப்பாரும் (௮௮)

அஷ்டதிக்குக்கீர்த்தியுடன் அரசாளுமன்னவர்க்கு
சட்டமுடன்திறைதோர்கள் சங்கைசெய்வாரோர்கோடி (௮௯)

நாதனருளாலே நபிமார்வரிசையிறல்
ஆதமக்களெல்லாரும் அழகாயிருந்தோத (௯௦)

உறக்கனிறகுருவுடைய காட்சிபெற்றகாரணர்க்கு
தக்கபெரியோருதவி தழைத்தோங்கும்வாசலிலே (௯௧)



சந்தனக்கூடெடுத்துச் சாய்பவர்கள்வீதியிலே
வர்த்த அலங்காரமதைவையகத்தோர்தான்பார்த்து (௯௨)

கண்டுமனமகிழ்ந்து கழிகூர்ந்தொதுவுடனே (௯௩)
நின்றுநின்றுகூடி சேர்ந்துதுவாவோதிவந்தார்

கத்திசுழற்றிவர கனகபட்டமதின்மிலங்க (௯௪)
பத்தியுடனே பாவாடைபோட்டுவர

குதிரைநெருங்கிவர கோடிமன்னர்சூழ்ந்துவர (௯௫)
மதுரைக்கவிராயருடன் வந்தகவிராயரெல்லாம்

புவிதனிலேகாட்சிபெற்ற புரவலர்கள்தான்மகிழ (௯௬)
கவிதைபடித்துவந்து கையேந்திநிற்பாரும்

ஆனைபரிசேனைகள்மே லழகானபேரிகையை (௯௭)
தானேயெடுத்தேத்தி சுதிராய்முழக்கிவர

நாகசுரம்ஊதநகரா அடிமுழங்க (௯௮)
வேகமுடனே விதவிதமாய் வாணம்விட

ஆகாசவாணமிட அழகாய்ப்பொறிபறக்க (௯௯)
கர்சாம்புவாணமிட கனிரிநிறைந்துவர

பந்தங்கொளுத்திவர பகல்வத்தின்நெரிய (௧௦௦)
விந்தையுடன்மத்தாப்பு விதவிதமாய்ப்போட்டுவர

ஆறுமுகத்திவட்டிகளணியணியாய்க்கொண்டுவர (௧௦௧)
பாரமுடன்வல்லையங்கள் பணிந்துவிளையாடிவர

அனுமக்கொடிபிடித்து அரசர்மக்கள்சூழ்ந்துவர (௧௦௨)
தனிமையுடனெல்லோரும் தாழ்ந்துமுடிசாய்த்துவர

வேதமுழங்க வெகுசனங்கள்காட்சிபெற
ஆதமக்கள்தின்தழைக்க அல்லாகிருபைபெற்றோர் (௬௦௩)

வந்தார்பவனிதன்னை வானோர்கொண்டாடிவர
சந்தனம்பொற்கூடுதன்னை சாய்புடையவாசலிலே (௬௦௪)

பொற்கூடுவந்த புதுமையலங்காரமதை
சொர்க்கவர்வாழுந் தோகையர்கள்வாழ்த்திநின்றார் (௬௦௫)

பொற்கூட்டைநேரேயிறக்கி புகழ்பெரியோர்வாசலிலே
கட்டுக்கிறைவைத்து நாடிவரங்கேட்பாரும் (௬௦௬)

மைந்தர்வரங்கேட்டு மடியேந்திநிற்பாரும்
சந்ததிகள்விருந்துகள்பேர் சந்திவைபோவென்பாரும் (௬௦௭)

குருந்தமரத்தடியில் கூடியேபெண்களெல்லாம்
இருந்துவிளையாடி எல்லாருந்தாம்புகழ (௬௦௮)

நோய்பிணிகள்வாராமல் நேர்க்கிவரங்கேட்பாரும்
சாய்புவர்கள்பள்ளியிலே சங்கைசெய்துபோவாரு— (௬௦௯)

போற்றிமனமகிழ்ந்து புகழ்ச்சியாய்வளர்போக
பத்திகாவேரி பாரினடந்துவிட்டார் (௬௧௦)

வல்லோனருளாலே வாழிமிகவாழி
அல்லாகிருபைபெற்ற ஆலமவாழி (௬௧௧)

நபிமார்கள்தன்னுடனே நாற்பத்திராயிரரும்
அவியார்குமாரர்களும் அன்பாய்மிகவாழி (௬௧௨)

வருதாககர்வாழும் ஏகையநிறைண்டவர்கள்
சுருதியுடன்வாழி தக்கோனருள்வாழி (௬௧௩)



பூலோகமெங்கும் புகழ்ச்சிபெற்றுவந்தோர்கள்
உலமாக்காளெல்லாரும் உகப்பாய்மிகவாழி (௬௧௪)

எழுவான்படுவானும் ஈரேழுலகமெல்லாம்
பழுதகற்றும்பாவாசாய்பவர்கள்தான்வாழி (௬௧௫)

இஜிறகான்கிளந்தோர் எல்லாரும்வாழ்ந்திருக்க
பிரியமுடனென்னுளும் பேர்விளங்கத்தான்வாழி (௬௧௬)

தொண்டமான்பெருநாத துரைமக்கள்மைந்தர்களும்
மண்டலத்திற்கீர்த்திபெற்ற பாவாசாய்புமிகவாழி (௬௧௭)

காரணமுங்காட்சிகளும் கானகத்தில்வந்ததுவும்
பாருலகிற்கண்டுவந்த பார்ப்பாத்திதான்வாழி (௬௧௮)

அலங்காரமாகவந்து அதட்டியேகல்லெடுத்து
கலங்காமல்நின்றெறிந்த கள்ளர்மிகவாழி (௬௧௯)

தன்மையுடனிப்புவியில் தழைக்கவந்தோர்காரணத்தை
அம்மானைப்பாடிவைத்த அதிபன்முகம்மதுடன்

எழுதிப்படித்தோர்கள் எல்லாருந்தான்வாழி
முழுதுந்தழைத்தோங்க முதலோன்கிருபைசெய்வான்.

முற்றிற்று.

[illegible] ம்பிரவாசாரிய ஆசாரனே

## விருத்தம்.

திருகழ்வளர்க்கின்ற [illegible] கண்ணரிசெல
இன்குலந்தனியுதித்த
திருக்கல்வைபுரியெனும் [illegible] ராக்
கிரின்தலத்துதித்த
சிறுவனைந்தெய்யமிர்ரகிபவைச் செல்வரு
[illegible] தழைக்கவேகான்
அருணாசல [illegible] வாழ்
[illegible] நிறுவிர்.

## ஆசிரியவிருத்தம்.

சீர்மேவு [illegible] கங்கை தங்கி [illegible] கைலாசம்
செயமுடன் மேவிவாழ்த்
திகழ்செய்தே [illegible] முதலான பதிகளிற்
சீர்மையாய்ச் சென்றுவந்து
கார்மேவு சோலைசிற் பார்ப்பனக் கன்னியின்
கர்ப்பதி [illegible]
கடவுள்குள் [illegible]
[illegible] குழியின் [illegible]
வர்மேவு [illegible] முகம் [illegible]
யின்பமிகு தேகமை வாழும்
இசைமிகு புகழ் பெருமிதமிய தம்பி
ராவுத்தர் மகன் இன்பமிகுவார் [illegible] பெற்றேன்
தார்மேவு மைசயதிபு ராஜோமகை [illegible]
[illegible] குலமெ [illegible]
தழைக்கவெகு புத்ர சம்பத்துமுளசெல்
வமுஞ் சிறப்புடன் வாழ்கமாதோ.

Checked
26/7